www.padippakam.com

15 செப்டம்பர் '95 □ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com



கூலி உயர்வு கேட்டு விவசாயிகள் போராட்டம்

மதுரை - உத்தமபாளையம் விவசாயிகள் விடுதலை முன்னணி, விவசாயிகளுக்கு கூலி உயர்வு கேட்டு வட்டாரம் முழுவதும் இரண்டு மாத காலமாக பிரச்சாரம் செய்துவந்து 10.7.95 அன்று சைக்கிள் பேரணியையும் 19.7.95 அன்று ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளது. கம்பம், பாளையம், புதுப்பட்டி, நாராயணத் தேவன்பட்டி, சுருளிப்பட்டி, கே.கே.பட்டி, கூடலூர், லோயர் கேம்ப் பகுதிகளில் நிதி வசூல், தெருமுனைக் கூட்டம், கலை நிகழ்ச்சி, துண்டு பிரசுரம் கொடுத்து வீடு வீடாகப் பிரச்சாரம் என பல வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டன. தோழர் சேகர் 10.7.95 அன்று நடந்த சைக்கிள் பேரணி பிரச்சாரத்தை தலைமை தாங்கி பேசி முடித்து வைத்தார். 19.7.95 அன்று உத்தமபாளையம் தாலுகா அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர் மோகன் உரையாற்றினார். இடையிடையே கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இறுதியில் தாசில்தாரிடம் மனு எழுதி கொடுக்கப்பட்டது. தினக் கூலி, நடவுக் கூலியில் உயர்வு கோரியும், வேலையில்லாக் காலங்களில் மாத நிவாரணத் தொகை கோரியும் மனு கொடுக்கப்பட்டது. அதிகாரிகள் வழக்கம் போலவே ஆவண செய்வதாக பதிலுரைத்தனர். இதை கூடியிருந்தவர்கள் மத்தியில் அறிவித்து போராட்டத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் கூலி உயர்வு பிரச்சினையினால் மட்டும் விடிவு கிட்டி விடாது, அரசியல் போராட்டங்களிலும் பங்கெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தோழர்கள் பேசினர்.

## நன்கொடை கொள்ளையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

பள்ளி, கல்லூரிகளில் நன்கொடை கொள்ளை மற்றும் கல்வி உரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து 3.7.95 அன்று மதுரை மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகம் முன்பு மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பு.மா.இ.மு. தோழர் கலைவாணன் தலைமையில் ஒரு மணி நேரமாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு 50-க்கும் மேற்பட்டோர் கூடி நின்று ஆதரவு தந்தனர். தோழர்கள் செந்தில், வேம்பன் (ம.க.இ.க.) ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## வி.வி.மு. கிளை தொடக்க விழா

நாமக்கல் வட்டம் - முத்துகாபட்டியில் 5.7.95 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணியின் கிளை தொடக்க விழா நடந்தது. இதன் பொருட்டு ஒரு வாரத்திற்கு முன்பாக மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்களின் உதவியுடன் கரும்பு, பருத்தி, கிழங்கு விவசாயிகளின் பாதிப்பை விளக்கிப் பேசியும் பாடல்கள் மூலம் எழுச்சியூட்டியும் தெருமுனைப் பிரச்சாரம் சுற்றுப் பகுதிகளில் நடத்தப்பட்டது. பொதுக்கூட்டம், எம்.ஆர்.அசோகன் தலைமையில் தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) சிறப்புரையாற்ற, தோழர் பரமசிவம் நன்றி நவிழ இனிதே நடந்து முடிந்தது. பகுதிப் பிரச்சினைகள் பற்றியும் காட் ஒப்பந்தத்தின் மூலம், புதிய - பொருளாதாரக் கொள்கை மூலம் நாட்டின் விவசாயத்திற்கு ஏற்படும் ஆபத்துகளைப் பற்றியும் தோழர்கள் எளிமையாக விளக்கிப் பேசினர். சுமார் 1500 பேர் நிகழ்ச்சியில் பங்கெடுத்து ஆதரித்தனர்.

## குடிநீருக்காகத் தொடரும் போராட்டம்

மதுரை - லோயர்கேம்ப் பகுதியில் பெரியாறு இருந்தும் மழைக் காலத்திலும் குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த ஒரு வருட காலமாக பகுதியிலுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பு குடிநீர் வசதி கேட்டு போராடி வருகின்றனர். கடைசியாக 25.12.94 அன்று பேருந்து மறியல் போராட்டம் நடத்திய போது ஒரு மாதத்தில் கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக கூடலூர் பஞ்சாயத்து செயல் அலுவலர் பொது மக்கள் முன்னிலையில் எழுத்து மூலமாக வாக்குறுதியளித்தார். 6 மாதங்களாகியும் எவ்வித சலனமின்றி அதிகாரிகள் இருக்கவே வி.வி.மு-வினர் மீண்டும் மக்களைத் திரட்டி 11.6.95 அன்று சாலை மறியல் செய்தனர். கைக்குழந்தையோடும் காலி குடங்களோடும் மழையில் நனைந்து கொண்டே பெண்கள் உறுதியுடன் 3 மணி நேரமாக போராடினர். மதுரை மாவட்ட கூடுதல் பேரூராட்சி அலுவலர் ஒரு மாதத்தில் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்த பின் போராட்டம் நிறைவுற்றது.

## தொழிற்சங்கக் கருத்தரங்கம்

தனியார் மயமாக்கலும் தொழிற்சங்கங்களின் செயலற்ற தன்மையும் என்ற தலைப்பில் 23.7.95 அன்று கோவை தொழிலாளர் பிரச்சாரக் குழு சார்பில் சேரன் பேலஸ் அரங்கில் கருத்தரங்கம் நடந்தது. தோழர் சந்திரசேகரன் தலைமை தாங்கினார். தொலைதொடர்பு ஊழியர்களின் பத்திரிகையான ''பாட்டாளி வர்க்கப் போராளி''யைச் சேர்ந்த ஜோசப் வில்லியம், கோவை மாவட்ட காலணித் தொழிலாளர் நலச் சங்கத் தலைவர் டி.என்.செல்வராசு, பாரத மிகுமின் நிலைய பைப்பிங் சென்டர் ஸ்டாப் யூனியன் பொதுச் செயலாளர் தங்கராசு ஆகியோர் உரையாற்றினார்கள். தொழிலாளர்கள் சுமார் 100 பேர் கலந்து கொண்டு ஆதரித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

பத்தாம் ஆண்டு

**18 - 20**

1 ஆக. - 15 செப். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


# மக்களைக் குழப்பும் விபரீத அரசியல் போக்குகள்

தமிழ்நாட்டு அரசியலில் இப்போது நிலவுவதைப் போன்றதொரு மிகவும் சிக்கலான, மாறுபட்ட, குழப்பமான போக்குக்ள் வேறெப்போதும் ஏற்பட்டதில்லை. தெளிவான, வெளிப்படையான அரசியல் போக்குகள் நிலவினால் மட்டும் மக்கள் தமது உண்மையான எதிரிகளையும் நம்பகமான சக்திகளையும், தமது அவல 'வாழ்வுக்குரிய காரணங்களையும் கண்டுபிடித்துவிடும் அளவுக்கு அரசியல் விழிப்புணர்வு' பெற்றிருக்கவில்லைதான்; என்றாலும் அடுத்துவரும் தேர்தலில் தாம் வீழ்த்த வேண்டிய சக்திகளையும், இன்னொரு வாய்ப்பளித்துத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்சிகளையுமாவது தீர்மானகரமாய் முடிவு செய்ய முடியும். ஆனால் எல்லா அரசியல்கட்சிகள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், அவை அனைத்தும் பிளவுபட்டு பலவீனமடைந்துவிட்ட நிலையில், ''குட்டையைக் குழப்பி மீன் பிடிப்பதே'' ஒரே வழி என்கிற முடிவில் செயல்படுகின்றன, குறிப்பாக பார்ப்பன - பாசிச ஜெயா மற்றும் நரசிம்மராவ் கும்பல்.

ஜெயலலிதா - சசிகலா கும்பலுக்கு எதிராக தமிழ்நாடு காங்கிரசும், சுப்ரமணியசாமியும் தீவிரப் பிரச்சாரமும் மத்திய அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் அடுத்தடுத்துப் பல நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகின்றனர். ''தமிழ்நாட்டு ஆட்சியில் லஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடுகள் மலிந்துவிட்டன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான சொத்துக்களை ஜெயாவின் உடன்பிறவா சகோதரி குடும்பத்தினர் வாங்கிக் குவிக்கின்றனர். ஆடம்பர உல்லாச, ஊதாரி வாழ்க்கை நடத்துகின்றனர். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு தறிகெட்டுப் போய்விட்டது. அராஜக - கிரிமினல் ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது. விடுதலைப் புலிகளுடன் ஜெயா - சசி கும்பல் கள்ள உறவு வைத்துக் கொண்டு அவர்கள் சிறையில் இருந்து தப்பிப் போகவும் தமிழ்நாட்டில் சுதந்திரமாக செயல்படவும் விடுகிறது. அதன் கேடான ஆட்சியால் தொழில் துறை முன்னேற்றம் தடைப்படுகிறது'' - இப்படி ஏராளமான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் சரியானவைதான் என ஏற்று மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரும் நிதித்துறை அமலாக்கப்பிரிவு அதிகாரிகளும் சில ''நடவடிக்கை''களை மேற்கொள்கின்றனர். ஜெயலலிதா மீதான லஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடுகள் மீது வழக்குத் தொடர சு.சாமிக்கு ஆளுநர் அனுமதி அளித்துள்ளார். ஆனால் அப்படி வழக்குப் போட உச்ச நீதிமன்றம் மூலம் தடை விதிக்கப்படுகிறது. பிரதமரும் பிரதமருடைய மகனும் அரசுத்தலைவரின் பேரனும் ஜெயலலிதா கும்பலுடன் அதீதமாகவே குலாவுகின்றனர். அவர்களுக்காக இங்கே யாகங்கள், விருந்துகள் பல நடக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தத் தவறுவது, தேர்தல் அடையாள அட்டை வழங்கத் தவறுவது முதல் பல்வேறு அதிகார முறைகேடுகளும் கண்டுகொள்ளப்படுவதில்லை. மாநில அரசைக் கலைப்பதை மட்டுமல்ல புலிகள் தப்பியது போன்றவற்றுக்காக அது பதவி விலகவும் தேவையில்லை என்கிறது காங்கிரசுத் தலைமை. அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டுக் கிடையாது என்று மாநிலக் காங்கிரசும், தனித்துப் போட்டியிடுவோம் என்று ஜெயாவும் கூறி வந்தாலும் காங்கிரசுத் தலைமை கல்லுளிமங்கனைப் போல மவுனம் சாதிக்கிறது; ஜெயாவுடன் கூட்டு வைத்தக் கொள்ள ஒருபுறம் சங்கராச்சாரி முதல் வெங்கட்ராமன் வரை தூது விடுவதும், மறுபுறம் மத்திய அமலாக்கப் பிரிவு அதிகாரிகளை ஏவி மிரட்டுவதும் நடக்கிறது; மாநிலக் காங்கிரசு என்ன சொன்னாலும் ஜெயா - ராவ் கூட்டுக்காக அவர்கள் முயல்வதாக வரும் செய்தியை மறுப்பதும் இல்லை.

இவையெல்லாம் ஒருபுறம் தமிழ்நாட்டு அரசியலைக் குழப்பிக் கொண்டிருக்கும் அதேசமயம், ஆளும் கட்சிக்குள், குறிப்பாக ஜெயலலிதாவுக்கும், சசிகலா குடும்பத்துக்கும் இடையிலான உறவு மர்மமாகவும் பல்வேறு வதந்திகள், சந்தேகங்களுக்கு இடமளிப்பதாகவும் இருக்கிறது. ஆளும் கட்சிக்குள்ளாகவே ஒருபுறம் கவுண்டர் சாதி மந்திரிகளும் மறுபுறம் முக்குலத்தோர் சாதி மந்திரிகளும் தமது தனிச்செல்வாக்கைத் திரட்டிக் கொண்டிருக்கின்றனர். இவர்களையும், எந்தப் பெரும்பான்மை சாதியையும் சேராத கண்ணப்பன், மதுசூதனன் போன்ற ''எடுபிடி'' மந்திரிகளை வைத்து குரங்காட்டம் நடத்திக் கொண்டிக்கிறார், ஜெயலலிதா. இதுவரை தமிழ்நாட்டு அரசியல் காணாதவாறு அதை ஆபாசமயமாக்கி, கிரிமினல்மயமாக்கி சட்டத்துக்குப் புறம்பான ஒரு அதிகார மையமாக சசிகலா-நடராஜன் குடும்பம் ஆட்டுவிக்கிறது. தினகரன், பாஸ்கரன், சுதாகரன் என்று ஒரு பெரிய சமூக விரோத கும்பல் தமிழ்நாட்டிலுள்ள பெரும் விலை மதிப்புள்ள சொத்துகளை வளைத்துப் போடுகிறது; பல ஆயிரம் கோடி ரூபாய் பணம் ''ஹவ்லா'' எனப்படும் ரொக்கக் கடத்தல் மூலம் வெளிநாடுகளுக்குப் போய், மீண்டு வந்து முதலீடு செய்யப்படுகிறது. பிரேமானந்தா சாமியார் முதல் புதுமுதலாளி ராஜரத்தினம், கடத்தல்க்காரன் அமீர் வரை பல பினாமிகள் அவர்களுக்காக வேலை செய்கிறார்கள். அரசியல் எதிரிகள் வெட்டிச் சாய்க்கப்படுகின்றனர். தினகரன், அமீர் முதல் ''வெல்டிங்'' குமார் வரை ஒரு பெரிய இரகசிய உலக கிரிமினல் - சமூக விரோத கும்பலே ஜெயலலிதா பரிவாரமாக உள்ளது. இத்துடன் சங்கராச்சாரி, வெங்கட்ராமன், சொக்கலிங்கம் ஆகிய ஒரு பார்ப்பன கும்பலும் ஊடலும் கூடலுமாக உறவு கொண்டுள்ளது. ஆனால் தினகரன், நடராஜன் போன்றவருக்கும் தமக்கும் சம்மந்தம்மில்லை எனக்காட்டிக் கொள்வதாக ஜெயா - சசிகலா ஜோடி பல நாடகங்களையும் நடத்துகிறது. இதற்கிடையே வீரப்பன் - ரஜினி ஆகிய சினிமா பிழைப்புவாதிகளும் ஆதாயம் தேடச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கும்பலை ஜெயா - சசிகலா ஜோடிக்கு ஒரு மாற்றுத் தலைமையாகப் பத்திரிகைகள் உருவேற்றி வருகின்றன. இப்படிக் குழப்பும் குட்டையைத் தம் பங்குக்கு கலக்கி அரசியல் ஆதாயம் அடையவே தேசிய முன்னணி - இடதுசாரிக் கட்சிகள் முயலுகின்றன. இவையெல்லாம் நாடாளுமன்ற ஜனநாயக அரசியலின், குழப்பத்தை மட்டுமல்ல, ஓட்டாண்டித்தனத்தையே நிரூபிக்கின்றன. இந்த அரசியல் கட்சிகள் எதற்குமே கொள்கை, கோட்பாடே கிடையாது. இவர்களின் நாய்ச்சண்டைகளை விலக்கி வைத்துவிட்டுப் பார்க்கும்போது அரசியல், பொருளாதாரம், பண்பாடு எந்தத் துறையிலேயும் இவைகளிடையே மாறுபாடு கிடையாது என்பதும், இவை அனைத்துமே நிராகரிக்கபட வேண்டியவைகள் என்பதும் விளங்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# பரவும் சாதிக் கலவரம் மீளும் சாதி ஆதிக்கம்

"சென்ற ஜூலை மாதம் 26-ந் தேதி நெல்லை மாவட்டத்திலுள்ள வீரசிகாமணி எனும் ஊரின் வழியே சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தின் ஓட்டுநர், சாலையை மறைத்துக் கொண்டு கும்பலாய் நடந்த மாணவர்களை வழி விடக் கோரி கீழ்த்தரமாகத் திட்டியிருக்கிறார். இதனால், மாணவர்களுக்கும் ஓட்டுநர் தங்கவேலுவுக்கும் இடையே எழுந்த சண்டையை ஊர்க்காரர்கள் தடுத்து சமாதானப்படுத்தினர். அருகிலுள்ள நடுவக் குறிச்சியினைச் சேர்ந்த அம் மாணவர்கள் ஓட்டுநர் திட்டியைத் தங்கள் பெற்றோர்களிடம் தெரிவிக்க, தேவர் சாதியினரைச் சார்ந்த அவர்கள் வீரசிகாமணிக்கு வந்து திரும்பி வந்த பேருந்தை வழிமறித்து ஓட்டுநரைப் பலமாகத் தாக்கினர்; ஓட்டுநரின் சொந்த ஊரான வடந்தம்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் இதனால் ஆத்திரமடைந்து வீரசிகாமணிக்கு வந்து தேவர் சாதியினரைத் தாக்கியுள்ளனர். இருட்டு நேரத்தில் நடந்த இம்மோதலின் பொழுது, அவ்வூரில் இருந்த முத்துராமலிங்கத் தேவர் சிலையும் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் நடந்து வரும் சாதி மோதலுக்கும் வன்முறை வெறியாட்டத்திற்கும் இச்சம்பவம் தான் தொடக்கமாகும்,

சிலை சேதமடைந்த மறுநாளே, இதைக் கண்டித்து வீரசிகாமணி, முறம்பு, இராசபாளையம் பகுதிகளில் தேவர் சாதியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர்; சங்கரன் கோவிலில் இப்பிரச்சனை கலவரமாக உருவெடுத்துப் பலர் தாக்கப்பட்டுள்ளனர். மாவட்டந்தோறும் கலவரச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை இழிவுபடுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

30-ந் தேதி சிவகிரியில் வாசுதேவ நல்லூர் தொகுதியினைச் சேர்ந்த காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் ஈசுவரனின் மருமகன் வீட்டைத் திரளாக வந்து தாக்க முற்பட்டனர் தேவர் சாதியினர்; வீட்டைச் சுற்றிப் பாதுகாப்பாக நின்றிருந்தனர் தாழ்த்தப்பட்டவர்கள். அப்பொழுது போலீசு நடத்திய துப்பாக்கி சூட்டில் ஏழு பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தை யடுத்து மறுநாள் அதிகாலையில் நெல்லையில் சிந்துபூந்துறை எனும் பகுதியில் வாழும் தடிவீரன் என்பவர் தனது வயக்காட்டில் வன்முறைக் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டார். இவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணனின் சித்தப்பா மகன். அன்றும் (ஜூலை 31) மறுநாளும் வன்முறைக் கும்பல் நடத்திய வெறியாட்டத்தில் நெல்லை நகரமே செயலற்றுப் போனது.

சிவகிரியில் கலவரம் நடந்தபொழுது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த கணேசன் வெட்டிக் கொல்லப்பட்டார். மதுரை மாவட்டம் வில்லூரில் தேவர் சிலைக்கு அருகில் படுத்துறங்கிக் கொண்டிருந்த பாண்டி, முகம் சிதைந்த நிலையில் மாண்டு கிடந்தார். காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த இலட்சுமண நாயக்கரும் சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த சுப்புராஜும் இக்கலவரத்தையொட்டி வன்முறைக் கும்பலால் கொல்லப்பட்டனர். சுப்புராஜ் இறந்து போன பின் புளியம்பட்டி மற்றும் சீவலப்பேரி கிராமங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

நெல்லை மாவட்டத்தில் ஆம்பூர், சேரன்மகாதேவி பகுதியிலும், நாங்குநேரி, வள்ளியூரிலும், சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டி, மணியாச்சி, தூத்துக்குடியிலும் கலவரத்தின் தீ நாக்குகள் பரவின. தென்காசி அருகே அம்பேத்கர் மற்றும் தேவர் சிலைகள் தகர்க்கப்பட்டன. கமுதி, மதுரை, திருமங்கலம், பகுதிகளில் தேவர் மற்றும் முக்குலத்தோர் பேரவையைச் சேர்ந்தவர்கள் பேருந்துகளை வழிமறித்தும், சாலை மறியல் - கடையடைப்பு போராட்டங்களை நடத்தியும் பதற்றமான சூழலை உருவாக்குவதற்கு மும்முரமாக முயன்றனர்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோருக்கும் மேல் சாதியினருக்கும் இடையே மோதல்கள் நடைபெறுவது இன்று வருடாந்திர நிகழ்ச்சி நிரல் போலாகி விட்டது. புளியங்குடி, இராமநாதபுரம், மேலூர், குறிஞ்சிலாங்குறிச்சி, நாலுமுனைக்கிணறு, போடி என எங்கும் இதன் இரத்தச் சுவடுகளைக் காண முடியும். பின்தங்கிய விவசாய உற்பத்தியே பிரதானத் தொழிலாக இருந்துவரும் தென் மாவட்டங்களில் மறவர், அகமுடையார் சாதியினர் தான் பிரதான ஆதிக்க சக்திகள்.

இப்பகுதியின் முக்கிய ஓட்டு வங்கியாக இச்சாதியினர் இருப்பதால், ஓட்டுக் கட்சிகளில் முக்கிய பொறுப்புகளிலும் இச் சாதிகளைச் சேர்ந்த சிலர் உள்ளனர். மேலும் சனாதன தர்மத்தை இன்றுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப புதுப்பித்து வரும் இந்து முன்னணி கும்பலின் முன்னணி சக்திகளும் இப்பகுதியில் இவர்கள் தான். பண்பாட்டு வளர்ச்சியிலும் பொருளாதார நிலையிலும் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள பிரன்மலைக் கள்ளர் சாதியினரை சாதிய மோதலின் பொழுது, தங்களது அடியாட்படையாகப் பயன்படுத்தி வருகின்றனர் இவர்கள்.

தஞ்சையின் ஆறுநாட்டு கள்ளர்கள் இம்மூன்று சாதிப் பிரிவினரையும் தங்களுடன் இணைத்துக் கொண்டு "தேவர்", "முக்குலத்தோர்" எனப் பெயர் சூட்டிக் கொண்டு, தமிழக அரசியலில் மிகப் பெரிய சக்தியாக எழுந்து வருகின்றனர். பிரன்மலைக் கள்ளர்கள். தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் சாதி ஆதிக்க சக்திகளாக இருக்கும் ஆறுநாட்டு கள்ளர்களைப் போல பண்ணையார்களோ /பணக்கார விவசாயிகளோ அல்லர். மிகப் பெரும்பாலோர் நடுத்தர மற்றும் கூலி - ஏழை விவசாயிகள் தான். ஆனால் இவர்கள் அரசின் சலுகைகளை இழந்து விடாதிருப்பதற்காக, தாங்கள் தேவர் என முத்திரை குத்தப்படுவதை எதிர்க்கும் பொழுதே, தாழ்த்தப்பட்டவர்களோடு தங்களை இனங்காட்டிக் கொள்வதில்லை.

மேல்சாதி குண்டர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட தடிவீரன்





படிப்பகம்

www.padippakam.com

ஜெயலலிதாவைக் கைப்பாவையாக வைத்துப் பல ஆயிரம் கோடி சொத்துக்களைக் குவித்துள்ள சசிகலா - நடராஜன் கும்பலுக்கு ஆதரவாக இவர்கள் அனைவரும் முக்குலத்தோர் என்கிற பெயரில் திரட்டப்படுகின்றனர்.,

புதிய தொழில்கள், இட ஒதுக்கீடு போன்றவற்றில் ஒரு சிறு பிரிவு தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி நடுத்தர வர்க்க நிலையை எட்டியுள்ளனர். இதன் காரணமாக சமூக ரீதியிலும் பண்பாட்டு ரீதியிலும் சமத்துவமும் சம உரிமையும் நிலவுவதாகக் கற்பிதம் செய்து கொள்கின்றனர். ஆனால் இவற்றில் எல்லாம் சாதி ஆதிக்கம் இன்றளவும் நீடிக்கவே செய்கின்றது.

அதே பொழுதில் இன்று சமூக - கலாச்சார - அரசியல் ரீதியில் பிழைப்புவாத - கிரிமினல் கும்பல்களுக்கும் நடைமுறைக்கும் இன்று பெருமளவு 'ஜனநாயக உரிமை' வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பிழைப்புவாதத் தலைவரான ஜான் பாண்டியன் சமீபத்தில் கைது செய்யப்பட்ட பொழுது, அவரது அடியாட்களும் இவ்வுரிமையை கையில் எடுத்துக் கொண்டு வன்முறையில் இறங்கினர். இது நடுத்தர வர்க்க நிலையை எட்டியுள்ள தாழ்த்தப்பட்டோர் மத்தியில் தங்களுக்கும் கூட அத்தகைய ஜனநாயக உரிமைகள் இருப்பதான தோற்றத்தைத் தருகிறது.

ஆனால் இத் தோற்றத்திற்கு மாறாக, எதார்த்தத்தில் மேல் சாதியினர், தாழ்த்தப்பட்டோர் கூலியானாலும் - அரசாங்க ஊழியரானாலும் சமூக - பண்பாட்டு தளத்தில் தங்களுக்குச் சமமாக நடந்து கொள்வதை அனுமதிப்பதில்லை. உதாரணமாக, வீரசிகாமணியில் பேருந்து ஓட்டுநர் தாழ்த்தப்பட்டவர் என்பதாலேயே ஒரு சிறிய் சாதாரண விசயம் சாதிக் கலவரமாக மேல் சாதி வெறியர்களால் தூண்டி விடப்பட்டுள்ளது. சுண்டூர், கரம் சேடு, விழுப்புரம் எனப் பல இடங்களில் ''உப்பு பெறாத'' சின்ன விசயம் சாதிக்கலவரமாக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்கள் இரையாகியிருப்பதைக் காணலாம்.

அரசியல் - அமைப்பு பலத்துடன் ஏவிவிடப்படும் சாதி வெறிக்கு தாழ்த்தப்பட்டவர்களே பெரிதும் பலியாகின்றனர்; இத்தகைய எதார்த்த சூழலில், அரசு அமைத்திடும் அமைதிக் கமிட்டிகளோ, ஓட்டுக்கட்சிகளின் நரித் தனமான நல்லிணக்க கூச்சல்களோ சாதிக் கலவரங்களைத் தடுத்து விடாது; ''சாதிக் கலவரங்களில் அப்பாவி மக்கள் பலியாகின்றனர்.'' எனக் கண்ணீர் வடிப்பதும் பலனற்றது. மாறாக, ஒவ்வொரு சாதிக் கலவரத்தின் பொழுதும் தாழ்த்தப்பட்டவர்களும் பிற சாதி உழைக்கும் மக்களும் பெறும் அனுபவங்களும் படிப்பினைகளும் சாதி ஆதிக்கமற்ற சமூகம் அமைக்கப்படுவதற்கு துணை புரியும்!

# ஈழப்போரின் இழுபறி நிலை தீராத் துயரில் ஈழத் தமிழர்கள்

**போர்** என்பதன் உடனடி நோக்கம், பொதுவாக தன்னைக் காத்துக் கொண்டு எதிரியை அழிப்பது தான். இது எல்லாப் போர்களுக்கும் பொருந்தும். போர்க்களம் என்றாலே அது கோரமாகத் தான் இருக்கும். அங்கே மனிதாபிமானம் பற்றிய பேச்செல்லாம் பத்தாம்பசலித்தனமே. ஆகவே எதிரிப்படையினரைக் கொல்வதில் ஈவிரக்கமற்ற மிருக வெறியைப் புரிந்து கொள்ள முடியும். ஜூலை 28-ந் தேதி அதிகாலையில் ஈழத்தின் விளிம்பில் உள்ள மணலாறு வெளிஓயா சிங்கள இராணுவ முகாமைத் தாக்குவதற்கு முன்னேறிய தமிழீழ விடுதலைப் புலிப்படையை, ஈழத் துரோகிகளின் உளவுச் செய்தியை முன் கூட்டியே அறிந்த சிங்கள இராணுவம் சுற்றி வளைத்து அவ்வளவு பேரையும் கொன்று துவம்சம் செய்தது.

சிங்கள இராணுவத்தின் கணக்குப்படி 280 புலிகள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதில் 128 பேர் பெண்கள். பலர் சிறுவர்கள். இதே போன்று எதிர்பாராத் தாக்குதலை நடத்தி பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிப்பதை புலிகளும் செய்துள்ளனர். முன்பு பூநகரியிலும், சமீபத்தில் மண்டைத் தீவிலும் சிங்கள இராணுவ முகாம்களின் மீது நடந்த திடீர் முற்றுகைத் தாக்குதலில் எதிரிகள் பேரிழப்பிற்கு உள்ளாகினர்.

ஆனால் ஜூலை 28 மணலாறு - வெளிஓயாவில் நடந்த இராணுவத் தாக்குதலுக்குப் பிறகு நடந்தவை பேரதிர்ச்சியைத் தருபவை. இந்த வெற்றியை சிங்கள இனவெறி இராணுவத்தினர் மிகவும் குரூரமான, வக்கிரமான முறையில் உலக இராணுவ - போர்களின் வரலாற்றில் வேறெங்கேயும் இப்படி நடந்திருக்குமா என்பது சந்தேகமே - கொண்டாடியிருக்கின்றனர். போரில் கொல்லப்பட்ட புலிப்படையின் பெண் போராளிகள் அவ்வளவு பேரும் நிர்வாணமாக்கப்பட்டு, வரிசையாக அடுக்கப்பட்டு பொதுமக்களுக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும் காட்டப்பட்டதோடு, அந்த குரூரமான, வக்கிரமான காட்சி வானொளிகளிலும் காட்டப்பட்டது.

மணலாறு - வெளிஓயா படுகொலையின் வெற்றிக் களிப்பில் சிங்கள இராணுவமும், அரசும் மிதந்து கொண்டிருந்த அதேசமயம் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கத் தொடங்கிவிட்டனர் விடுதலைப் புலிகள். இராணுவ முகாம்களைப் பார்வையிட்டுத் திரும்பிய கிழக்கு இராணுவ அரங்கத் தலைமைத் தளபதி பிரிகேடியர் நளின் அங்கமனாவை கண்ணி வெடி வைத்துக் கொன்றொழித்தனர். அடுத்த சில நாட்களிலேயே, கொழும்பு நகரின் மையத்திலுள்ள இலங்கை மேற்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தை குண்டு வைத்துத் தகர்த்தனர். இருபதுக்கும் மேலான அரசு ஊழியர், மாண்டதோடு, 50-க்கும் மேலானோர் படுகாயமுற்றனர்; அடுத்த ஓரிரு நாட்களிலேயே மட்டக்களப்பு அருகிலுள்ள ஒரு இராணுவ முகாமில் குண்டு வைத்து சிலரைக் கொன்றொழித்தனர்.

இலங்கை - ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை, மீண்டும் அதே பாதையில் அடுத்த சுற்று வலம் வந்து தீர்வு காண முடியாத இழுபறி நிலைக்குத் திரும்பியுள்ளது. 1983 ஜூலை ஈழத் தமிழர் மீதான இனப்படுகொலைக்குப் பிறகு, போர் - போர் நிறுத்தம் - சமாதான, பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சி - அது முறிவு - மீண்டும் போர் என்கிற பாதையில் நான்கு சுற்றுகள் வந்து விட்டது. பிரச்சினைக்கு அடிகுறையான அரசியல் திட்டம் - தீர்வுகளினாலோ முழு அளவிலான இராணுவப் படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது. ஆனால் ஒவ்வொரு முறையும் பிரச்சினை மேலும் சிக்கலாவதோடு இராணுவ ரீதியில் மட்டுமல்லாது இரு தரப்பிலும், குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு பேரிழப்புகளும் துயரங்களும் அதிகரித்தே வருகின்றன. ஆனால் சந்திரிகா தலைமையிலான இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புமே இப்போது நடப்பது இறுதிக் கட்டபோர் என்று பிரகடனப்படுத்தியுள்ளன.

பன்னிரெண்டு ஆண்டுகளாக நீடித்துவரும் இலங்கையின் உள் நாட்டுப் போருக்கு இதுவரையிலும் காணாத மிக மிகச் சரியான, திறமையான தீர்வு ஒன்றை அதிபர் சந்திரிகா பண்டாரநாயக குமாரத்துங்கே கண்டு விட்டதாக உலகின் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் புகழ்கின்றன. ''1993-இல் நடந்த மாகாண சபைத் தேர்தல்களில் வென்று மேற்கு மாகாண முதல்வராவதற்கும், அதன் பின் 1994-இல் நாடாளுமன்றத்



படிப்பகம்

www.padippakam.com



வெளிஓயா படுகொலையில் இறந்த புலி போராளிகளை அடுக்கி ரசிக்கும் சிங்கள இனவெறியின் குரூரம்

தேர்தலில் வென்று பிரதமராவதற்கும், அப்புறம் 1994 இறுதியில் அதிபர் தேர்தலில் வெல்வதற்கும் அடிப்படையாக, ஈழப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதே தனது இலட்சியம் என்கிற முழக்கத்தை முன் வைத்தார். நீண்ட போரினால் அவதிப்பட்ட சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று அடுத்தடுத்து உயர்ந்த பதவிகளைப் பெற்று அதிபரானார். பிரதமராக இருந்த போதே போர்நிறுத்தத்தைக் கொண்டு வந்து, புலிகளுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு அடித்தளமிட்டார். போர் நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம், 4000 கோடி ரூபாய்க்கு ஈழ அபிவிருத்தி - மறுசீரமைப்புத் திட்டம் வழங்கினார். ஆனால் யுத்த வெறிபிடித்த பிரபாகரன் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டு, ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டு மீண்டும் போரைத் துவங்கினார். இது சந்திரிகாவுக்கு ஏமாற்றமளித்தாலும், முன்னேறும் பாய்ச்சல் நடவடிக்கை என்னும் இராணுவத் தாக்குதலில் இறங்கி ஈழத்தின் பல பகுதிகளைப் புலிகளிடம் இருந்து மீட்டு இராணுவ ரீதியில் மேல்கை நிலையை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுவிட்டார்.

''அதே சமயம் இராணுவத் தீர்வை மட்டும் நம்பியிராமல், கடந்த ஆகஸ்டு 3-ந் தேதி ஒரு அரசியல் திட்டத்தையும் அறிவித்துள்ளார். சிங்கள இனவெறிக் கலவரத்தில் தகர்க்கப்பட்ட 1957 பண்டாரநாயக்கே செல்வநாயகம் ஒப்பந்தம், புலிகளால் தகர்க்கப்பட்ட 1987 ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் ஆகியவற்றைக் காட்டிலும் ஈழத் தமிழர்களுக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்கக் கூடியது சந்திரிகா அறிவித்துள்ள இத்திட்டம். முதன்முறையாக இலங்கையின் ஒருமை அரசியல் அமைப்பை மாற்றி, பிராந்தியங்களின் ஒன்றியமாக்கப்படும்; ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் தமிழ் - சிங்களம் இரண்டுமே ஆட்சி மொழியாக்கப்படும்; பிராந்திய முதல்வரும் அமைச்சர்களும் அடங்கிய வாரியம் அமைக்கப்படும்; அவர்களுடைய ஒப்புதல் பெற்ற ஆளுநர்களே நியமிக்கப்படுவர்; பிராந்திய சட்டமன்றத்துக்கு மட்டுமே பிராந்திய ஆட்சியை நீக்கும் உரிமை தரப்படும்; பிராந்திய ஆளுநரோ மத்திய அரசோ (இந்தியாவில் செய்வதைப் போல) ஆட்சிக் கலைப்பு செய்யமுடியாது. மத்திய - பிராந்திய அரசுகளுக்குப் பொதுவான அதிகாரங்கள் கிடையாது. இந்திய மாநிலங்களுக்குள்ளதை விட அதிக அதிகாரங்களும், ஒலி - ஒளி பரப்பு உரிமைகள், நேரடி அந்நிய முதலீடு - தொழில் - வர்த்தக உறவுகளும் கூட ஏற்கப்படுகின்றன; தேசிய போலீசு அமைப்பு இருந்தாலும், பிராந்திய அரசுகளுக்கு எதிரான அவசர ஆதிக்க அதிகாரம் எதுவும் மத்திய அரசுக்குக் கிடையாது'' - இப்படி சந்திரிகாவின் அரசியல் திட்டத்தின் அருமை பெருமைகளைப் பட்டியலிடும் அவரது ஆதரவாளர்கள், இதன் மூலம் முதன் முறையாக இலங்கையில் பல மொழிச் சிறுபான்மை இனப்பாகுபாட்டையும், பல பண்பாட்டு மாறுபாட்டையும் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்படுவதாகப் போற்றுகின்றனர். பெரும்பான்மையான ஈழத்தமிழ்கள் ஏற்கக் கூடியதுதானென்றும், சிங்கள இனத்தவரும் குறிப்பாக இனவாத அரசியல் கட்சிகளும், குழுக்களும் ஏற்க வைப்பதில்தான் சிரமமுள்ளது என்றும், விடுதலைப் புலிகள் இத்திட்டத்தைத் தகர்க்க முயன்றாலும் தமிழ் மக்களிடம் இருந்து அவர்களைத் தனிமைப்படுத்தி இராணுவ ரீதியில் ஒடுக்கி விட முடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

**இலங்கைப் பிரச்சினைக்கு அரைகுறையான அரசியல் திட்டத்தினாலோ முழு அளவிலான இராணுவப் படையெடுப்புகளாலோ விடிவு காண முடியாது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகி உள்ளது.**

ஆனால், சமாதான முயற்சி, போர் நிறுத்தம் என்ற பெயரில் சந்திரிகா அரசும் இராணுவத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தது. அமைதியை, கருணையைப் போதிக்கும் புத்தப் பிட்சுகள் கூட சிங்கள இனவெறியர்களாக உள்ளதால் தமது காவி உடையைக் கலைந்துவிட்டு இராணுவத்தில் சேருகின்றனர். பெண்கள் உட்பட சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேரும்படி தூண்டுகின்றனர். இதை யெல்லாம் ஒருபுறம் செய்து கொண்டே, அதிகாரப் பகிர்வு, சமாதானம் என்கிற மாய்மாலம் செய்கிறது சந்திரிகா அரசு. ஈழத்தமிழின துரோக அமைப்புகள் இதை ஏற்கும் அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் மட்டுமே வடக்குடன் இணைக்கப்பட்டு தமிழர் பிராந்தியம் அமைக்கப்படும் என்பதை மட்டும் ஆட்சேபிக்கின்றனர். இது இலங்கை குடியேற்றத்தை அங்கீகரித்து நிரந்தரமாக்கி விடும் எனக் கூறுகின்றனர். ஏற்கனவே வரதராஜபெருமாள், பத்மநாபா கும்பல் செய்ததைப் போல ஈழத்தில் இன்னொரு துரோகப் பொம்மை ஆட்சியை நிறுவிடத் தயாராகி வருகின்றனர். ஆனால் அதற்கு அவர்கள் தமது உயிரையே விலையாகத் தரவேண்டி இருக்கும்.

மணலாறு - வெளிஓயா தாக்குதலினால் பேரிழப்பையும், பின்னடைவையும் சந்தித்த போதிலும் எதிர்த் தாக்குத


படிப்பகம்

www.padippakam.com

லைத் தொடங்கிவிட்ட விடுதலைப் புலிகள், சந்திரிகாவின் அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரித்து விட்டனர். ஜெயவர்த்தனே, பிரேமதாசா முதலிய முந்திய சிங்கள அரசு அதிபர்கள் கொடூரமான இனவெறியர்களாக மட்டுமே இருந்தனர்; ஆனால் அதோடு சந்திரிகா, ஒரு தந்திரிகா எண்ணுமளவு சூழ்ச்சி - சதிகாரியாகவும் இருக்கிறார் என்கின்றனர் புலிகள். ஆனால் இதே புலிகள் தாம் அவர் பிரதமராகவும், அதிபராகவும் பதவியேற்று பேச்சு வார்த்தை போர் நிறுத்தம் தொடங்கியபோது உண்மையான ஜனநாயக வாதி, சமாதான விரும்பி என நம்பும்படி ஈழத்தமிழர்களுக்குச் சொன்னார்கள். தனி ஈழம் மட்டுமல்ல, சுயநிர்ணய உரிமை கூடத் தேவையில்லை, மாநில சுயாட்சியானாலும் ஏற்கத் தயார் என்று புலிகளின் சித்தாந்த குரு ஆண்டன் பாலசிங்கம் அறிவித்தார். ஆனால் இப்போது போர் ஒன்றுதான் தீர்வு என்று எழுச்சியில் இறங்கிவிட்டனர். ''நிதியும் ஆட்பலமும் இருந்தால் 20-ம் நூற்றாண்டுக்கு முன் ஈழம் மலரும்'' என்று புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி கூறுகிறார்.



பாலகர்களும் போர் முனையில்

நிதிபலமும், ஆயுதபலமும் திரட்டுவது கூட சாத்தியமாகலாம்; புலிகள் அதில் திறமைசாலிகள் தாம். ஆனால் முடிவே இல்லாமல் போரிடவும், பலியிடவும் தேவையான படைபலம் - ஆட்பலம் அவர்கள் எங்கிருந்து, எப்படிப் பெற முடியும். ஒரு தலைமுறையின் இளைஞர்களில் பெரும்பாலோர் கடந்த 12 ஆண்டு போர்களிலும், தோழமைக் கொலைகளிலும், குடியேற்றங்களிலும் இழந்தாகிவிட்டது. பெண்கள் இராணுவச் சேவையிலும் போரிலும் ஈடுபடுவது சரியானது. அவசியமானது. ஆனால் துப்பாக்கி சுமக்க முடியாத சிறுவர்கள் கூட ஈழப்போரில் பலியிடப்படுகின்றனர்; ஈழ தேசபக்தியில் உறுதியோடிருப்பினும்,புலிகளின் பாசிசத் தலைமையை ஏற்க மறுக்கும் காரணத்திற்காக பல இளைஞர்கள் ஈழத்திலிருந்து விரட்டப்படுகின்றனர்; வேட்டையாடப்படுகின்றனர். புலிகளுடன் உடன்படாதவர்கள் கூட துரோக முத்திரை குத்தி வேட்டையாடப்படும் நிலையில் உண்மையிலேயே புலிகளிடையே துரோகிகள் உருவாகியிருப்பது மனலாறு - வெளிஓயா சம்பவம் நிரூபித்துள்ளது. தன் நிழலைக் கூட நம்பாத பாசிசப் புலிகளுக்கு இதுமேலும் வெறியூட்டவே செய்யும்.

இராணுவ ரீதியில் வெற்றிகளைச் சாதித்திருப்பதாக உரிமை பாராட்டினாலும், சமீபத்தில் அது கைப்பற்றிய சந்திப்பிளி துண்ணாவி, பொன்னலை, அரளி, வடக்குக் கோட்டை ஆகிய பகுதிகளில் இருந்து பின்வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. ''நாங்கள் சண்டைகளில் வெற்றி பெற முடியும், ஆனால் போரில் வெல்வது என்பது சாத்தியமே இல்லை'' என்று சந்திரிகாவே ஒப்புக் கொண்டுள்ளார். அதேசமயம் புலிகளாலும் இராணுவ ரீதியிலான ஒரு இறுதி வெற்றியை ஈட்ட முடியாது என்பது தெளிவானது. இப்போது சந்திரிகா முன் வைத்துள்ள அரசியல் திட்டமோ, ஈழத்தமிழரை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து சுயநிர்ணய உரிமை கோரிக்கையை ஏற்க மறுத்துள்ளது. இந்திய மாநிலங்களுக்குள்ளதைவிடக் கூடுதலான அதிகாரம் வழங்குவதாக இருந்தாலும், சுயநிர்ணய உரிமைக்குக் குறைவான எதையும் ஈழத் தமிழர்கள் ஏற்க முடியாது. மேலும் சிங்கள அரசுகள் எதுவுமே அறிவிக்கும் அதிகாரப் பகிர்வு ஒப்பந்தங்களை நேர்மையாக அமுலாக்கியதாக வரலாறே கிடையாது. சுயநிர்ணய உரிமைக்குக் குறைவான எந்தவொரு தீர்வும் ஈழத்தமிழருக்குத் துரோகமானதேயாகும்.

ஆனால் அதை அடைவதற்கு சில முன் நிபந்தனைகள் தேவை. விடுதலைப் புலிகளின் பாசிசத் தலைமையை மாற்றி அனைத்து ஈழ தேசபக்த - ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு பரந்த ஐக்கிய முன்னணி நிறுவப்பட வேண்டும். ஈழதுரோக அமைப்புகள் தவிர இலங்கையிலும், வெளிநாடுகளிலும் புலம்பெயர்ந்துள்ள அனைத்து ஈழத் தமிழர்களும் அமைப்புகளும் ஈழம் திரும்பவும் சிங்கள இராணுவ ஆதிக்கத்துக்கெதிராகப் போரிட அழைக்கப்பட வேண்டும். அனுமதிக்கப்படவேண்டும். அவ்வாறான ஐக்கிய முன்னணியின் கீழ் ஈழப்போரைத் தொடரும் அதேசமயம், ஈழ சுயநிர்ணய உரிமையை ஏற்கும்படி சிங்களப் பேரினத்திற்கு நெருக்கடிகளை உருவாக்க வேண்டும். தொடரும் போர் அதை நிச்சயம் ஏற்படுத்தும். அதை அவ்வினம் ஏற்காமல் போனாலும் பரந்த ஈழ தேசிய ஐக்கிய முன்னணிதான் இராணுவ ரீதியிலான தீர்வுக்கு நிச்சயமான தலைமையாக அமையும்.

• ஆர்.கே.

## புலிகள் தப்பிய சம்பவம்: கோழையும் துணிவு கொள்வான்

கேலிக்கூத்துகள் நிறைந்த தமிழ் நாட்டு அரசியலில் மேலும் பரபரப்பூட்டும் இன்னொரு விஷயமாக வந்துள்ளது, ''வேலூர் சிறப்பு முகாமில் இருந்து 43 விடுதலைப் புலிகள் தப்பிய சம்பவம்''. ஜெயலலிதா ஆட்சியின் நிர்வாகத் திறமை குறைவு, ஜெயா - புலிகள் கள்ளக் கூட்டு ஆகியவையே புலிகள் தப்பியோடக் காரணமென்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. போலீசை நவீனமயப்படுத்த தேவையான நிதியும், அந்நிய நாட்டவரைச் சிறைப் பிடிக்க போதிய அதிகாரமும் மத்திய அரசு தரத் தவறியதே காரணம் என்று ஜெயலலிதா எதிர்க் குற்றசாட்டுகளை வீசுகிறார்.

இதுவரை 12 ''புலிகள்'' பிடிக்கப்பட்டு அவர்களில் 3 பேர் சயனைடு குப்பி கடித்து மாண்டு போயினர். இன்னமும் 31 பேர் பிடிபடவில்லை. ராஜீவ் கொலையையொட்டி நடந்ததைப் போல பெரிய அளவுக்கு மனித வேட்டை மீண்டும் நடக்கிறது. புலிகள் அடைக்கப்பட்டிருந்த திப்பு மகாலில் இருந்து 10 அடி ஆழத்துக்கு, 3 அடி அகலத்துக்கு, 153 அடி நீளத்துக்கு சுரங்கம் வெட்டி, வெளியேறி, கோட்டை மதிலைத் துளைத்து, அகழியை நீந்திக் கடந்தனர்; இது நீண்ட கால சதி; நிறைய ரொக்கப் பணமும், புது ஆடைகளும், வெடி மருந்துகளும் ''அழகி மூலம்'' கிடைத்துள்ளது; தலைவர்களைக் கொல்லும் நோக்கத்துடன் தப்பி வந்துள்ளனர் என்றெல்லாம் வதந்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன.

ஆனால் புலிகளின் ஆதரவு கட்சிகளோ, இயக்கங்களோ கூட எழுப்பாத, நியாயமான, அவசியமான யாருமே எழுப்பத் துணியாத சில கேள்விகள் உள்ளன. தப்பியோடியதாகக் கூறப்படுபவர்கள், மற்றும் வேலூரில் ''சிறை'' வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் உண்மையில் புலிகள்தானா? அதற்கு என்ன ஆதாரம்? ்,வர்கள் அனைவரும் புலிகள் அமைப்பினரே ஆனாலும் அவர்கள் செய்த குற்றம் என்ன? அவர்கள் தடுத்து வைத்திருப்பது சிறையா? சிறப்பு முகாமா? இப்படி காலவரையறையின்றி, ஒரு வழக்கும், நிரூபிக்கப்பட்ட குற்றமும் இல்லாமல் இவ்வளவு பேரை சிறை வைத்திருப்பது எந்த வகையில் நியாயம்? அவர்கள் தமது தாயகம் திரும்பவும் சுதந்திரமாக வாழவும் அனுமதிக்க வேண்டுமென்று ஐ.நா. சபை வரைமுறையிட்டும், பல வகையில் போராடியும் வந்துள்ளனர். இந்த காரணங்கள் - நிலைமைகள் ஒரு வடிகட்டிய கோழையைக் கூட தப்பியோடும்படி துணிவு கொள்ளவே செய்யும். இந்த உண்மைகளை மூடி மறைத்து ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டி அதிலும் ஆதாயம் காண விளையும் அரசியல்வாதிகள்தாம் உண்மையில் சிறப்பு முகாமில் வைக்கப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் புலிகளின் பாசிசம்

**புலிகள் ஈழத்தில் ராணுவ ரீதியாகப் போராட்டத்தில் ஊன்றி நிற்கிற அதே சமயம் ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக விரோத செயல்களையும் தொடர்வதற்கு இப்பிரசுரங்கள் சாட்சி**

## பிரான்சில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குத் தடை

16-07-95 அன்று பிரான்சின் தலைநகரமான பாரிஸ் நகரில் உள்ள "பாரிஸ் ஈழ நாடு" பத்திரிகை அலுவலகத்தினுள் புகுந்த புலிகளின் காடைக் கும்பல் ஒன்று ஈழ நாடு முகாமையாளர் திரு.எஸ்.பாலசந்திரனைக் கடுமையாகத் தாக்கியமை புகலிடத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கும் மக்கள் விரோத, ஜனநாயக எதிர்ப்பு, எதேச்சாதிகாரத்தின் வெளிப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் ஒரு ஆதரவுப் பத்திரிகையாகவே தொடங்கி கடந்த 5 ஆண்டுகளாக ஐரோப்பாவின் வியாபாரப் பத்திரிகையாக, முன்னணியில் நிற்கும் தமிழ்ப் பத்திரிகையாக, புலிகளின் ஊதுகுழலாக நின்று பல சந்தர்ப்பங்களில் பத்திரிகா தர்மத்தை மீறிய நிலையிலும் கூட இப்பத்திரிகை செயற்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் விடுதலைப் புலிகள் தங்களின் பணபலம், ஆட்பலம், ஸ்தாபன அதிகாரம் ஆகியவற்றின் மூலம் ஐரோப்பாவின் ஈழமுரசு பத்திரிகையை நடத்த ஆரம்பித்தபோதுதான் பாரிஸ் ஈழ நாட்டின் விற்பனையுடனும், அதன் விளம்பர வருமானத்துடனும் எந்த வழியாலும் போட்டி போட்டு வெல்ல முடியாது என்பதனை நடைமுறை பூர்வமாக உணர முடிந்தது.

இந்நிலையில் அடாவடித்தனமாக பாரிஸ் ஈழ நாடு பத்திரிகையை வீழ்த்தும் வேலையில் புலிகள் இறங்க ஆரம்பித்தனர். தங்களின் ஸ்தாபன ஆட்பலத்தைப் பயன்படுத்தி சுவிஸ் போன்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள பத்திரிகை முகவர்களை அச்சுறுத்தி பாரிஸ் ஈழ நாடு பத்திரிகையை விநியோகிக்க வேண்டாமென தடுத்து நிறுத்தினர்.

லண்டன் போன்ற இடங்களில் வீரகேசரி பத்திரிகையின் விலையை சாதாரணமாக விற்கும் அதன் விலையிலும் பார்க்க மிகக் கூடிய விலை வைத்து விற்குமாறு கடைக்காரர்களை நிர்பந்தித்தனர். பலவந்தமாக உயர்த்தப்பட்ட இவ்வீரகேசரி விலை அதிகரிப்பின் காரணமாக மக்கள் தங்கள் ஈழ முரசு பத்திரிகையை விலை கொண்டு வாங்குவார்கள் என புலிகள் எதிர் பார்த்தனர். பல கடைகளில் ஈழ நாடு பத்திரிகையை வாடிக்கையாளர்களின் கண்களுக்குத் தெரியாதவாறு மறைத்து வைத்து விற்க வேண்டுமென்றும், ஈழ முரசு பத்திரிகையை மாத்திரமே வாடிக்கையாளர்களின் பார்வைக்குத் தெரியுமாறு வைத்து விற்க வேண்டுமென்றும் கடைக்காரர்களை வற்புறுத்தினர்.

புலிகளின் ஆதரவாளர்கள் ஈழமுரசுதான் தங்கள் பத்திரிகையெனக் கூறி அதன் விற்பனையைப் பெருக்கும் முயற்சிகளில் இறங்கினர். தமது பத்திரிகை ஒரு நடுநிலைப் பத்திரிகை எனக் காட்டுவதற்காக புகலிடத்தில் வாழும் சந்தர்ப்பவாத எழுத்தாளர்கள் ஈழமுரசில் எழுத வைக்கப்பட்டனர்.

இப்படியெல்லாம் பண்ணிப் பார்த்தும் பாரிஸ் ஈழநாடு அதன் வாசகர் மத்தியில் பெற்ற ஆதரவை ஈழமுரசு பெற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ஒரு பத்திரிகைத் துறையைச் சார்ந்த எவருமே நினைத்துப் பார்க்க முடியாத மிகக் கேவலமான நடவடிக்கைகளில் புலிகள் இறங்கினர். அதன் விளைவுதான் 16.7.95-இல் ஈழநாடு முகாமையாளர் திரு.எஸ்.பாலசந்திரன் புலிகளால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட நிகழ்வாகும். "பொன்னாலையை இலங்கை இராணுவம் கைப்பற்றிவிட்டது"என்பதற்கு பதிலாக "துன்னாமலை" எனத் தவறுதலாக அச்சேற்றியதுதான் காரணம் எனக் கூறிக் கொண்டு பிரபல இலங்கைத் திரைப்படக் கலைஞர் திரு.ஏ.ரகுநாதன் முன்னிலையில் வைத்து பாலச்சந்திரனை கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள்.

"எங்களுக்கு எப்படிப் பத்திரிகை நடத்துக்கிறது என்று தெரியும். நீ இன்னும் ஒரு மாதத்தில் பேப்பரை மூட வேண்டும். ஐரோப்பாவில் ஒரேயொரு பத்திரிகைதான் வர வேண்டும். அது எங்கள் ஈழமுரசு பத்திரிகையாகத்தான் இருக்கும். இன்னும் ஒரு மாதத்தில் பத்திரிகையை நிறுத்தாது போனால் 'சபாலிங்கத்தின்' கதிதான் உனக்கும் நடக்கும்" என்றும் அந்தக் கோஷ்டி பாலச்சந்திரனை எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளது.

"பாரிஸ் ஈழ நாடு" ஒரு நேர்மையான பத்திரிகை நெறிமுறையை கடைப்பிடித்து வந்திருக்கிறது என்று நாம் கூறவரவில்லை. ஆயினும் ஒரு பத்திரிகையானது அச்சுறுத்தல், அதிகாரம், மிரட்டல், அடாவடித்தனம், வன்முறைத் தாக்குதல், மரண அச்சுறுத்தல் ஆகியவற்றின் மூலம் நிறுத்தப்பட கூடாது; நிறுத்தப்பட முடியாது என்ற நியாயத்தையே நாம் கோருகிறோம். இத்தகைய ஓர் அரசியல் வன்முறை எழுத்துச் சுதந்திரத்தை, பத்திரிகைச் சுதந்திரத்தை, வெளியீட்டுச் சுதந்திரத்தைக் குழி தோண்டிப் புதைக்க முனையும் நேரத்தில் ஈழமுரசு பத்திரிகையோடு தொடர்புபடும் எழுத்தாளர்களும், அடிப்படை மனித உரிமையின் பேரில் நம்பிக்கை கொண்ட வாசகர்களும் ஈழ முரசை முற்றாகப் பகிஷ்கரிப்பதுவே இப்படியான 'எழுத்துலக அராஜகத்திற்கு' எதிரான குரலுக்கு ஆதரவு வழங்குவதாகும்.

***'தீதும் நன்றும் பிறர் தர வாரா'* குழுவினர்**
**19.7.95**

### பாரிசில் புலிகளின் காடைத்தனம்

புலிகளின் பிரெஞ்சுக் கிளையின் அடியாட்கள் கும்பல் ஒன்று ஆயுதங்களுடன் "லாசப்பலில்" உள்ள "ஹரன் இன்ரனாசனல்", "சபரினா உணவகம்" ஆகியவற்றிலிருந்து வந்து கடந்த வியாழன் அதிகாலை 3 மணியளவில் குகன் என்னும் இளைஞரைத் தாக்கியுள்ளது. அவ்விளைஞர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

15 பேர் கொண்ட மேற்படி கும்பல் தொடர்ந்து தமக்கு எதிரிகளானவர்களைத் தேடித் திரிந்த போது கடந்த வெள்ளி மாலை 5 மணியளவில் தவம் எனப்படும் தனபாலசிங்கம் தவராசா என்ற இளைஞரை அகிலன் கடைக்கு முன்னால் வைத்துக் கடத்தியுள்ளது. பின்னர் பரமன் எனப்படும் கனகரத்தினம் திருவானந்தம் என்ற இளைஞரும் கடந்த சனியன்று கடத்தப்பட்டுள்ளார். இவர்களின் கதி என்னவென்பது இதுவரை எவருக்கும் தெரியவில்லை.

இக் காடைத்தனத்தை கண்டிப்பதோடு நியாய உணர்வுள்ள தமிழர் சமூகம் இத்தகைய சம்பவங்களுக்கெதிராக மிக வலிமையாகக் குரல் கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

'பாரிஸ் வாழ் தமிழர் சமூகம்'
16.07.95



படிப்பகம்

www.padippakam.com

# சாதிக்கொரு மாவட்டம் திராவிட அரசியலின் பரிணாமம்

**கோ**டிகோடியாய் கொள்ளையடித்து, அருவெறுக்கத்தக்க அடக்குமுறை ஆட்சி நடத்தும் பாசிச ஜெயா கும்பல், வரப்போகும் பொதுத் தேர்தலைக் குறி வைத்து சாதிக்கொரு மாவட்டத்தை அமைத்து ஆதரவு திரட்டக் கிளம்பியுள்ளது. திருச்சி மாவட்டதை நிர்வாக நலன் கருதி திருச்சி, கரூர், பெரம்பலூர் ஆகியவற்றைத் தலைநகரங்களாகக் கொண்ட மூன்று மாவட்டங்களாகப் பிரித்து இயக்கப் போவாதாக அண்மையில் ஜெயா அரசு அறிவித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் முத்தரையர் சாதியினர் அதிகமாக உள்ளதால், அம்மாவட்டத்துக்கு சோழர் காலத்தில் அமைச்சராக இருந்த பெரும்பிடுகு முத்தரையர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதேபோல, கொங்கு வேளாளர் (கவுண்டர்) சாதியினர் அதிகமாக உள்ள கரூர் பகுதியைத் தனி மாவட்டமாக்கி, அச்சாதியில் உதித்த சுதந்திரப் போராட்ட வீரரான தீரன் சின்னமலையின் பெயர் வைக்கப்பட்டது. பின்னர் கவுண்டர் சாதியினரின் கோரிக்கையை ஏற்று தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஜெயா ஆட்சிக்கு வந்த பிறகு மூன்றாவது முறையாக இப்படி மாவட்டங்கள் பிரிக்கப்படுகிறது. முதலில் தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நாகை மாவட்டத்துக்கு காயிதே மில்லத் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, வன்னிய சாதியினர் (படையாட்சி) அதிகமாக உள்ள பகுதிக்கு விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம் எனப் பெயரிடப்பட்டது.

திருச்சி மாவட்டப் பிரிப்புக்கு சில மாதங்களுக்கு முன்பாக கொங்கு வேளாளர் சாதியினர் கரூரில் மாநாடு, பேரணி நடத்தி தமது சாதிய பலத்தைக் காட்டி, கரூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் அமைக்கக் கோரினர். அச்சாதியினரைத் திருப்திபடுத்தி, தனக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டத்தை அமைத்துள்ள ஜெயா கும்பல், தீரன் சின்னமலைக்குச் சிலை வைக்க அனுமதியும் ரூ. 1 லட்சமும் நன்கொடையும் அளித்துள்ளது. ''கவுண்டர் இன மக்களின் கோரிக்கையை ஏற்று, தீரன் சின்னமலைக் கவுண்டரைப் பெருமைப்படுத்தும் வகையில், புதிய மாவட்டத்தை நிறுவிய புரட்சித்தலைவிக்கு நன்றி! நன்றி!'' என்று அச்சாதியத் தலைவர்கள் ஜெயா அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். இதேபோல், திருச்சியில் முத்தரையர் சாதியத் தலைவர்கள் ஜெயாவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்கள். இப்படித்தான் முன்பு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றும் காமராஜர் மாவட்டம் என்றும் ராமசாமி படையாட்சியார் மாவட்டம் என்றும் புதிய மாவட்டங்களுக்கு சாதிப் பெயர் இணைத்துப் பெயரிடப்பட்டது.




தமது பெயரோடு சாதிப்பெயர், குலப் பெயர்களை இணைத்துக் கொள்வதை இழிவாகவும் அவமானமாகவும் கருதிய தமிழகம் இன்று, படிப்படியாக வடமாநிலங்களின் வழியில் சாதியத்துக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறது. முன்பு சாலைகளின் பெயர்களில் இருந்த சாதிப் பெயர் இணைப்பை வெட்டியெறிந்த தமிழகத்தில் இன்று பாசிச ஜெயா ஆட்சியில் வெளிப்படையாகவே சாதி அடிப்படையிலான மாவட்டங்கள் அமைக்கப்படுகிறது. இது சாதியப் பிற்போக்கு சக்திகளின் வெற்றியை மட்டுமல்ல; பிழைப்புவாதிகளாகச் சீரழிந்துவிட்ட திராவிட இயக்கத்தின் தோல்வியைத்தான் நிரூபித்துக் காட்டுகிறது.

கொள்கை லட்சியங்களைப் பேசி இனியும் ஓட்டுப் பொறுக்க முடியாத தோல்வி நிலையில், திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகள் கடைசியாக, ஏற்கனவே சாதிய அரசியலில் மூழ்கியிருந்த காங்கிரசைப்போல அதில் தஞ்சம் புகுந்து விட்டன. தமிழகத்தில் ஆங்காங்கே சாதிய சங்கங்கள் தோன்றி வேர்விட்டபோது, அவற்றை பிராமண எதிர்ப்பு இயக்கங்களாகவும், இட ஒதுக்கீடு - சமூக நீதிக்கான இயக்கங்களாகவும் தி.க. வீரமணி உள்ளிட்டு அனைத்து திராவிடப் பிழைப்புவாதத் தலைவர்களும் தமிழினவாதக் குழுக்களும் வெட்கமின்றி நியாயப்படுத்தினர். இன்று அவை அரசியலை ஆட்டிப் படைக்கும் சக்தியாக வளர்ந்துவிட்ட பிறகு, இப்பிற்போக்கு சக்திகளுடன் சமரசம் செய்து கொண்டு பிழைப்புவாத மாய்மாலம் செய்கின்றனர். முன்பு இலைமறை காய்மறையாக திராவிடக் கட்சிகள் சாதிய அமைப்புகளுடன் சந்தர்ப்பவாத கூட்டணி கட்டிக் கொண்ட நிலைமை மாறி, இன்று பாசிச ஜெயா கும்பல் வெளிப்படையாகவே சாதிய சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு சதிராடுகிறது. பிழைப்புவாதிகளாகச் சீரழிந்து விட்ட திராவிட இயக்கத்தின் புதிய பரிணாம வளர்ச்சிதான் இது. கையாலாகாத எதிர்க்கட்சிகளோ, சாதிய ஓட்டு வங்கியை இழந்து விடாதிருக்க, பாசிச ஜெயாவின் சாதிய சதிராட்டத்துக்கு அறிந்தே துணை போகின்றன.

முந்தைய மாவட்டப் பிரிப்பின் போது பெயர் சூட்டப்பட்ட கட்டபொம்மனும், வ.உ.சி.யும் தற்போதைய மாவட்டப் பிரிப்பில் பெயர் சூட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலையும் வெள்ளையனை எதிர்த்துப் போராடி வீர மரணமடைந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள். இவர்களின் பெயரால் மாவட்டம் அமைப்பதும் கூட அப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட சாதியினரைத் திருப்திபடுத்தி தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்ளும் நோக்கத்


படிப்பகம்

www.padippakam.com

தோடு தான் செய்யப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளான இவர்களும் சாதியத் தலைவர்களாக கொச்சைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதே போல காயிதே மில்லத், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப் பட்டிருப்பதானது, சிறுபான்மை முஸ்லிம்கள் மற்றும் தலித்துகளை தம்பக்கம் ஈர்த்து ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்திற்காகத்தான்! சம்புவராயர், பெரும்பிடுகு ஆகியோர் நாட்டுக்கோ, சமுதாயத்துக்கோ, பாடுபட்டதாக எந்த வரலாறுமில்லை. வெறுமனே நிலப்பிரபுத்துவ அரச பிரமுகர்கள் என்பதைத் தவிர வேறு எந்த தகுதியும் இவர்களுக்கு இல்லை. ஆனாலும் இச்சாதிகளை தமக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்வதற்காகவே இச்சாதியப் பிரமுகர்களின் பெயர் சூட்டப் பட்டுள்ளது. இராமசாமி படையாட்சியாரோ, தனது வன்னிய சாதியினரை பகடைக் காய்களாக்கி சந்தர்ப்பவாத அரசியல் நடத்திய சாதியத் தலைவர். கொள்கை - லட்சியத்தைக் கைவிட்டு நாற்காலி பதவிக்காக கட்சி மாறிய, பார்ப்பன ராஜாஜியுடன் கூட்டு சேர்ந்த பிழைப்புவாதி. இருப்பினும், வன்னிய சாதியினரை தம்பக்கம் ஈர்ப்பதற்காகவே இச்சாதியத் தலைவரின் பெயர் சூட்டப்பட்டது.

இது தவிர கவர்ச்சிவாத - செல்வாக்குமிக்க பிரபல தலைவர்களான அண்ணா, எம்.ஜி.ஆர்., பெரியார் பெயராலும் மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களின் மீது பற்றுக் கொண்ட எதிர்க்கட்சித் தொண்டர்களை தம் பக்கம் ஈர்க்கும் நோக்கத்துடனேயே இப்பிரபலத் தலைவர்களின் பெயராலும் மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இனி, பார்ப்பனர்களுக்குப் பெருமை சேர்க்க ராஜாஜி மாவட்டமும், சங்கராச்சாரி மாவட்டமும் அமைக்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது. அந்த அளவுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் எல்லா சாதியினர் பெயராலும் மாவட்டங்கள் அமைக்கப்பட்டு விட்டன.

இத்தகைய சாதி மற்றும் பிற உள்நோக்க அடிப்படையிலான மாவட்டப் பிரிப்புகளைக் கண்டு அச்சாதியைச் சேர்ந்த மக்கள் பெருமை கொள்ள முடியாது. இது , அச்சாதியினருக்கு மட்டுமல்ல. மொத்த மாவட்டத்துக்கே இழிவானது; அவமானகரமானது. இச்சாதிய மாவட்டப் பிரிப்பால் அச்சாதியைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் முன்னேறியதாகவும் வரலாறில்லை. சாதி வெறியர்களும் பிழைப்புவாதிகளும் பழம் பெருமைகளைப் பேசி தமது நிலையை உயர்த்திக் கொள்ளவும், சாதிய ஆதிக்க சக்திகள் மேலும் பலம் பெறவும்தான் இவை உதவியுள்ளன.

• குமார்

**டூபாண்ட் நைலான் ஆலை:**

# கோவாவில் உதைபட்டவனுக்கு தமிழகத்தில் விருந்துபச்சாரம்

பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அவர்களது பங்காளிகளான தரகு முதலாளிகளுக்கும் தமிழ்நாடு புறம்போக்கு பூமியாகவே ஆளும் ஜெயா கும்பலால் திட்டமிடப்பட்டு மாற்றப்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழலுக்கு மிகுந்த கேடு விளைவிக்கும் என்பதால் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து அடித்துத் துரத்தப் பட்ட ஸ்டெர்லைட் தொழில் நிறுவனத்தைத் தடையின்றி தூத்துக்குடியில் அமைத்துக் கொள்ள அனுமதியளித்தது பாசிச ஜெயா கும்பல்; இதையடுத்து தற்பொழுது கோவாவில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தாபர் - டியூபான்ட் நிறுவனத்தின் நைலான் தொழிற்சாலையினை கும்மிடிபூண்டியில் தொடங்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1,20,000 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட அமெரிக்காவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனமான டியூபான்ட், இந்தியாவின் தரகு முதலாளித்துவ நிறுவனமான தாபருடன் இணைந்து சுமார் 625 கோடி ரூபாய் முதலீட்டில், டயர் தயாரிப்புக்குத் தேவைப்படும் மூலப் பொருளான நைலான் 6,6 எனப்படும் நூலிழையைத் தயாரிக்கவுள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகவே, இத்தொழிற்சாலையை கோவா மாநிலத்திலுள்ள கேரிம் எனுமிடத்தில் நிறுவ, இலஞ்சம் - ஊழல், அதிகார முறைகேடுகள், பொய்யான தகவல்கள் என சகல வழிகளிலும் முயன்று வந்தது தாபர் - டியூபான்ட் நிறுவனம். பசுமையான கேரிம் பகுதியை குடிக்கக் கூட தண்ணீர் இன்றிப் பாலையாக இத் தொழிற்சாலை மாற்றிவிடும் எனப் புரிந்து கொண்ட அப்பகுதி மக்கள், சாலை மறியல், தடையரண்கள், நிறுவனத்தின் கட்டிடங்களையும் கருவிகளையும் தாக்கி அழிப்பது என நாளுக்கு நாள் இந்நிறுவனத்திற்கு எதிராக தங்களின் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

முன்பிருந்த காங்கிரசு ஆட்சியில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, போலீசு அடக்குமுறையை போராடிய அம்மக்களின் மீது ஏவியது தாபர் - டியூபான்ட். போலீசாரின் துப்பாக்கி குண்டுக்கு கேரிம் பகுதியைச் சேர்ந்த இருபத்திரெண்டே வயதான நிலேஷ்நாயக் பலியாக, அம்மக்களின் கோபாவேசம் பன்மடங்கு அதிகரித்தது. அதன்முன் நிற்க முடியாமல், இன்று ஜெயாவின் அரவணைப்பில் பாதுகாப்பாக பதுங்கிக் கொள்ள முயலுகிறது தாபர் - டியூபான்ட். கோவாவில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட இரண்டே மாதங்களுக்குள், எவ்விதப் பரிசீலனையும் இன்றி இந்நிறுவனத்துடன் ஒப்பந்தமிட்டுக் கொண்டு விட்டது ஜெயா கும்பல், அதோடு ஜெயா தானே முன் வந்து, ''இத்தொழிற்சாலை சுத்தமானது; பாதுகாப்பானது'' என்ற நற்சான்றிதழையும் வழங்கியுள்ளார்.

ஆனால் உண்மையோ ஜெயாவின் கூற்றுக்கு நேர்மாறானது. இத்தொழிற்சாலை சுற்றுச் சூழலுக்கும் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் ஏற்படுத்தக் கூடிய அபாயங்களைக் கண்டறிந்து, இத்தொழிற்சாலையினை கோவாவில் நிறுவுவதைத் தடை செய்யக் கோரியது கோவா சட்டமன்றக் குழு. இதன் ஆய்வறிக்கையைப் பார்த்தோமானால், முதலாளிகள் தூக்கியெறியும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கிக் கொள்ள சொந்த மாநில மக்களையே மயானத்திற்கு அனுப்பி வைக்கும் எமனாக ஜெயா கும்பல் உருமாறியிருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

நைலான் 6,6 தயாரிப்பிற்குப் பயன்படும் முக்கியமான இரண்டு வேதிப் பொருட்கள் அடிபிக் அமிலமும், ஹெக்ஸாமெதைலின் டையாமினுமாகும். ''மனிதர்களுக்கு மிகவும் ஊறுவிளைப் பிப்பவை'' என அமெரிக்காவிலுள்ள நியுஜெர்ஸி மாநில பொதுநலத்துறையில் இவ்வேதிப் பொருட்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன. மேலும் இவ்வேதிப் பொருட்களை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு இடம் மாற்றும் பொழுதே சுற்றுச்சூழலைப் பாதிக்கும் நச்சுத் தன்மை கொண்டவை. தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரில் உள்ள ஹெக்ஸாமெதைலின் டையாமின் அருகிலுள்ள நீர்நிலைகளில் கலக்கும் பொழுது நீரிலுள்ள பிராண வாயுவை வேதி வினை மாற்றத்தின் மூலம் இல்லாமற் செய்து விடும். இதனால் மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள் இறந்து போகும். மேலும் இவ்வேதிப் பொருட்களினால் மனிதர்களுக்குப் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தொழிற்சாலையின் தேவைக்காக தினமும் 7 லட்சம் காலன் தண்ணீர் தருவதற்கு தமிழக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 60000 மக்களுக்கு சராசரியாக அன்றாடம் தேவைப்படும் தண்ணீர் அளவாகும் இது. இப்பகுதியிலுள்ள ஆரணி ஆறு, மழைக்காலங்கள் தவிர பிற மாதங்



படிப்பகம்

www.padippakam.com

களில் வறண்டுதான் காணப்படும். எனவே, தொழிற்சாலையின் தண்ணீர் தேவையை ஈடுசெய்ய, இராட்சத ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து, நிலத்தடி நீரை எடுப்பதைத் தவிர தமிழக அரசுக்கு வேறு வழியில்லை. இதனால் பாசனக் கிணறுகள் வறண்டு போய் வேளாண்மை பாதிக்கப்படுவதோடு, குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்படும்.

மேலும் நைலான் இழை தயாரிக்கும்பொழுது உருவாகும் நைலான் துணுக்குகள் தொழிலாளர்களின் நுரையீரலினுள் புகுந்து சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும். தொழிற்சாலையின் கூடுதல் மின்சாரத் தேவைக்காக இயக்கப்படும் ஜெனரேட்டர்களில் கந்தகம் கலந்த டீசல் எண்ணெய் பயன்படுத்தப்படவுள்ளது. ''இதில் இருந்து வெளியேறும் புகை அமில மழையை உருவாக்கும்'' எனத் தெரிவித்துள்ளனர் கோவா சட்டமன்றக் குழுவினர். அப்படியொரு நிலை வருமாயின் பின் புல் - பூண்டு கூட கும்மிடிப்பூண்டி பகுதியில் முளைக்காது.

உலகிலேயே மிக நவீன தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்திருப்பதாகப் பீற்றிக் கொள்கிறது தாபர் - டியூபான்ட். நைலான் 6,6 என்ற இவ்வகை தொழில் நுட்பம் இன்று மேலை நாடுகளில் காலாவதியாகிப் போன ஒன்றாகும். அந்நாடுகளில் இன்று ''ரேடியல் டயர்'' என்ற தொழில்நுட்பத்தைத் தான் பயன்படுத்துகிறார்கள். இதனால் ''ஊருக்கு இளைத்தவர் புள்ளையார் கோவில் ஆண்டி'' என்ற கதையாக, இக்காலாவதியாகிப் போன தொழில் நுட்பத்தை நமது நாட்டின் தலையில் கட்டி காசு பண்ணும் கபடத்தனம் இது. மேலும் அடிபிக் அமிலம், ஹெக்ஸாமெதைலின் டையாமின் என்ற இம்மூலப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமாதலால், அந்நிய செலாவணி இழப்பும் ஏற்படும். இவற்றோடு 625 கோடி ரூபாய் மூலதனத்தில் நிறுவப்படும் இத்தொழிற்சாலையில், சராசரி 600 பேருக்குத் தான் வேலை வாய்ப்பு கிட்டும் வாய்ப்புள்ளது.

இப்படி சுற்றுப்புறத்தை நஞ்சாக்கி மனிதர்கள் வாழ முடியாத சூழலை ஏற்படுத்துவதைத் தவிர, வேறெந்தப் பலனுமற்ற இத்தொழிற்சாலைக்கு ஒப்புதல் அளித்து பல்வேறு சலுகைகளையும் வாரியிறைத்துள்ளது ஜெயா அரசு. 50 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமிடப்படும் எந்தவொரு தொழிற்சாலையினையும் தொடங்க இடத்தைத் தெரிவு செய்யும் முன்னேயே சுற்றுப்புறச் சூழல் வாரியத்தின் ஒப்புதல் பெற வேண்டும் என்பது விதி. இவ்விதி மீறப்பட்டுள்ளதோடு, தாபர் - டியூபான்ட் நிறுவனம் ஒப்புக் கொள்ளும் விலைக்கு, 150 ஏக்கர் நிலத்தை சுற்றுப்புறப் பகுதியில் இருந்து கையகப்படுத்தித் தரும் வகையில் ஒப்பந்தம் இடப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளுக்கு 9 கோடி ரூபாய் வரை மின் கட்டணச் சலுகை, கலால் வரியில் 50 சதவீத சலுகை, 14 ஆண்டுகளுக்கு வட்டியில்லாத கடன் என டியூபாண்ட் கொள்ளையிட்டுச் செல்ல நம் மக்களின் வரிப் பணம் வாரியிறைக்கப்பட்டுள்ளது.

கோவாவைப் போலவே தமிழக மண்ணில் இருந்தும் தான் விரட்டியடிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக தாபர் - டியூபான்ட் நிறுவனம் சமயோசிதமாக தமிழக மக்களை முட்டாளாக்கும் எல்லாவிதமான முயற்சிகளிலும் உடனடியாக இறங்கி விட்டது. முதற்கட்டமாக கும்மிடிபூண்டி பகுதியில் இருந்து வேலையற்ற 150 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தனது செலவில் தொழில் நுட்ப பயிற்சியளித்து வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. கும்மிடிபூண்டி பகுதியிலுள்ள பள்ளி தலைமையாசிரியர்களை அழைத்து, இத்தொழிற்சாலையால் ஏற்படப் போகும் 'பலன்களை' அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, அரசு ஊழியர்களைத் தனது இலவச பிரச்சாரர்களாக ஜெயா அரசின் ஒப்புதலுடன் களத்தில் இறக்கி விட்டுள்ளது.


கோவாவில் டூபான்ட் ஆலை அமைந்திருந்த தோற்றம்

மறுபுறம், ''தான் அமைக்கவுள்ள தொழிற்சாலையில் இருந்து கழிவு நீரை வெளியேற்ற மாட்டோம்; அந்நீரை சுத்தப்படுத்தி, அதைக் கொண்டு தொழிற்சாலையின் உள்ளேயே ஒரு சோலையை அமைப்போம்; நிலத்தடி நீருக்குள் கழிவு நீர் இறங்கிவிடாதபடி இருக்க, தொழிற்சாலை முழுவதும் கான்கிரீட் படுக்கை கட்டப்படும்; சமையல் செய்யும் பொழுது வெளியேறும் புகையை விட மாசற்ற புகைதான் வெளியேறும்'' என தன் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு விரிவான விளக்கங்கள் இன்றி பத்திரிகைகள் மூலம் பதில் அளித்து வருகிறது தாபர் - டியூபான்ட். கோவாவில் இருந்து தான் வெளியேறியதற்குத் தனது தவறுகள் காரணம் இல்லையென்றும், அப்படிக் கூறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தனது இரட்சகர் ஜெயா அரசைத் தூண்டி விடுகிறது.

டியூபான்டின் கடந்த கால வரலாற்றை சற்றே புரட்டினோம் என்றாலே, அது எவ்வளவு தூரத்திற்கு மக்கள் விரோத நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது எனப் புரிந்து கொள்ளலாம்.

● உலகிலுள்ள அனைத்து உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்கு இயற்கையான கவசமாக அமைந்துள்ள ''ஓசோன்'' படலத்தைத் துளையிடும் "CFCS" என்ற வாயுவைத் தயாரிப்பதை 1995-ஆம் ஆண்டுக்குள் நிறுத்திவிட எடுத்த முயற்சிக்கு முதல் முட்டுக் கட்டையாக நின்றது டியூபான்ட்.

● காற்று மண்டலத்தை நஞ்சாக்கும் "HCFC" மற்றும் "HFC" என்ற வாயுக்களையும், புற்று நோயை உருவாக்கும் "TEL" என்ற வேதிப் பொருளையும் தயாரிப்பதில் முன்னணியாக உள்ளது.

● அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி மாநிலத்தில், டியூபான்ட் தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய நீர் நிலத்தடி நீரை நஞ்சாக்கியதால் பல லட்சக்கணக்கான டாலர்களைச் செலவழித்துத் தூய்மைப்படுத்தும்படி உத்தரவிடப்பட்டது.

● மெக்சிகோவில் மாட்டாமோரோஸ் எனுமிடத்தில் இதன் தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய நச்சு வாயுவின் காரணமாக, இரண்டு மைல் சுற்றளவில் வசித்த 30000 மக்கள் வெளியேற்றப்பட்டனர்; அப்பகுதி விளைநிலங்கள் நஞ்சாயின. டியூபான்ட் 21 லட்சம் டாலர் நஷ்ட ஈடு செலுத்தியது.

இப்பின்னணியின் காரணமாகத் தான் டியூபாண்டின் நைலான் 6,6 தொழில் நுட்பத்தை முழுவதும் வெளியிடுமாறு சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் கோரும் பொழுதெல்லாம் வாய்மூடி மௌனம் சாதிக்கிறது. மேலும் இந்தியாவில் இத்தொழிற்சாலையில் ஏதேனும் விபத்து ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படுமா


படிப்பகம்

www.padippakam.com



ஃபோர்டு நிறுவன அதிகாரிகளுடன் ஜெயா: ஏகாதிபத்திய விசுவாசம்

## ஃபோர்டு கார் தொழிற்சாலை முதலாளிகளுக்கு பலியிடப்படும் விவசாயிகள்

சென்னையில் அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான ஃபோர்டும், இந்தியாவின் "ஜீப்" உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மஹிந்திரா நிறுவனமும் இணைந்து கார் உற்பத்தியைத் தொடங்கவுள்ளன. இதற்கு ஒப்புதல் அளித்துள்ள ஜெயா அரசு, இத்தொழிற்சாலையினை அமைப்பதற்காக சென்னையில் இருந்து தெற்கே 45 கி.மீ. தொலைவில் திருச்சி செல்லும் சாலையில் அமைந்துள்ள கீழ்கரணை, சித்தயலூர், செங்குன்றம் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து 400 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, இப்பன்னாட்டு நிறுவனத்திற்கு 200 ஏக்கர் நிலத்தைத் தாரை வார்த்துள்ளது. ஏற்கனவே 1970-களில் இப்பகுதிகளில் என்ன விலைக்கு தமிழக அரசு விளை நிலங்களைக் கையகப்படுத்தியதோ, அதே அடிமாட்டு விலைக்கு அதாவது 1 செண்ட் (100 சதுர அடி) 1050 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை விலைகொடுத்து இந்நிலங்களை எடுத்துக் கொள்ள உத்தரவிட்டுள்ளது. தற்பொழுது இக்கிராமங்களில் விவசாயம் செய்யவும், ஆடு - மாடு மேய்க்கவும் கையளவேயான நிலம் கூட சொந்தமின்றி 550 குடும்பங்கள் நடுத்தெருவுக்கு விசிறி எறியப்படவுள்ளனர்.

இப்படி அந்நிய நாட்டு நிறுவனத்திற்கும் அதனது தரகனுக்குமாக சொந்த மண்ணிலேயே தாங்கள் வஞ்சிக்கப்படுவதை எதிர்த்து இக்கிராம மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர். கடந்த ஜூன் மாதம் 21-ந் தேதி நிலத்தைப் பார்வையிட வந்த ஃபோர்டு நிறுவன அதிகாரிகளைத் துரத்தியடித்தனர்.

அடுத்து, 26-ந் தேதியன்று அரசின் ஆணையை எதிர்த்து ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சியாளரிடம் மனு கொடுக்க போலீசிடம் அனுமதி பெற்றிருந்தனர். ஆனால் அதற்கு முதல் நாளே இம்மூன்று கிராமங்களிலும் போலீசு படையை இறக்கிவிட்டு பீதியூட்டியது ஜெயா அரசு. இதோடு, "ஊர்வலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது; வீட்டை விட்டு யாரும் வெளியே வந்தால் கைது செய்வோம்" எனவும் மிரட்டியது. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த இராமதாசு என்ற விவசாயி கைது செய்யப்பட்டார். பின் கிராம மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு அவரை மீட்டு வந்தனர்.

26-ந் தேதி காலை ஊர்வலத்திற்குப் புறப்படத் தயாரான பொது மக்கள் பீதியூட்டி துரத்தப்பட்டனர். மீறி புறப்பட்டவர்களை ஊர்வலமாகச் செல்லவிடாமல் தடுத்து வேனில் ஏற்றிச் சென்று உதவி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இறக்கிவிட்டு மனு கொடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டது, போலீசு. தாங்கள் வாங்கவுள்ள நிலத்தை மீண்டும் பார்வையிட அதே நாளில் வந்த ஃபோர்டு நிறுவன அதிகாரிகளிடம் தங்களின் விசுவாசத்தைக் காட்டிக் கொள்ளும் முகமாகத்தான் நாயைவிடக் கேவலமான இழிபிறவிகளாகத் தங்களை காட்டிக் கொண்டுள்ளனர், போலீசார். அடக்குமுறைக்கு எதிராகத் துணிவோடு நின்ற அம்மக்களை, 20 இலட்ச ரூபாய் செலவில் குடிதண்ணீர், சாலை போக்குவரத்து, வீட்டு வசதிகள் போன்ற அற்ப சலுகைகளை அள்ளி வீசி மயக்கி விடலாம் எனத் தற்பொழுது அலையத் தொடங்கியுள்ளது அதிகார வர்க்கம். சாதிய முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு பித்தாலும் சூழ்ச்சிக்கும் முயற்சி செய்கிறார்கள். பகுதி மக்கள் இவற்றிற்கு எதிராக சரியான, உறுதியான தலைமையின் கீழ் போராட்டத்தைத் தொடர வேண்டும்.

---

யின், தான் (டியூபான்ட்) பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்ற விதியொன்றையும் அயோக்கியத்தனமான முறையில் ஒப்பந்தத்தில் இட்டுள்ளது.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் விசயத்தில் நமது நாட்டு தாபர் நிறுவனத்தை குட்டிப் பிசாசு என்றே கூறலாம். மகாராஷ்டிரா மாநிலத்தில் சந்திராபூரில் தாபர் நடத்தும் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்திய சுற்றுச் சூழல் மாசு மட்டு மீறிப் போனதால், மாசு கட்டுப்பாடு வாரியம் இந்நிறுவனத்தை மூடிவிட உத்திரவிட்டது. இதன் பின்னரே ஐந்து லட்ச ரூபாயை தண்டத் தொகையாகக் கட்டி, மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது, தாபர் நிறுவனம்.

ஏகாதிபத்தியங்களின் இக்கபடத்தனமான சுரண்டல் மோசடிகளைப் புரிந்து கொண்டுதான், கோவா மக்கள் தங்கள் மண்ணில் இருந்து தாபர் - டியூபான்ட் நிறுவனத்தைத் துரத்தியடித்தனர்; மகாராஷ்டிராவில் இருந்து என்ரானைத் தூக்கியெறிவதில் அம்மாநில மக்கள் வெற்றி ஈட்டியுள்ளனர். கோவா மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தினையும் அவர்களது தியாகங்களையும் மதிப்பதனை வாயளவில் மட்டுமல்லாது, மக்கள் விரோத தாபர் - டியூபான்ட் நிறுவனத்தை இந்தியாவில் இருந்தே துரத்தும் வண்ணம் போராட தமிழக மக்கள் முன்வரவேண்டும்; இல்லையெனில், அவர்கள் சொரணையற்று அமைதியாக அந்நியன் ஒருவர் தங்களின் பூமியை மயானமாக்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என உலகம் தூற்றுவதற்கு ஆளாக நேரிடும்.

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

☆ அந்நிய கம்பெனிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு உரிமை
☆ அழிவது இந்திய கடல் வளமும் மீனவர் வாழ்வும்

# புதிய கடற் கொள்ளையர்கள்

இந்தியக் கடலின் மீன் வளத்திற்கும், இந்திய மீனவர்களின் தொழிலுக்கும் வாழ்க்கைக்கும் "ஆழ்கடல் மீன்பிடிப்பு" (Deep Sea Fishing) வடிவில் பெரும் ஆபத்து வந்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்புத் தொழிலை இதுவரை இந்தியாவிலுள்ள தரகு முதலாளித்துவ மற்றும் தேசிய முதலாளித்துவ பிரிவினரே செய்து வந்தனர். உலக வர்த்தக கழகம் (WTO) நிபந்தனைகள் அமுலுக்கு வந்த '95 ஜனவரி மாதம் முதல் அந்நிய - பன்னாட்டு கம்பெனிகளும் இந்திய கம்பெனிகளுடன் கூட்டு மூலதனமிட்டு இந்தியக் கடலில் மீன்பிடிக்க பெருவீத அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளன. முன்பு ஆழ்கடல் மீன்களை பத்துக்கணக்கான உள்நாட்டு கப்பல்கள் (Trawlers), சிறுகப்பல்கள் (Vessels) பிடித்து வந்தன என்றால் இன்று நூற்றுக்கணக்கான அந்நிய நாட்டு கப்பல்கள், சிறு கப்பல்கள் பிடித்து வருகின்றன.

ஆழ்கடல் மீன்பிடிப்பால் நிகழ்கிற சமூக பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏராளம்.

கடல் வளத்தின் தனிச்சிறப்பே அது அள்ள அள்ள வற்றாத செல்வம் (Sustainable development) என்பதே. நமது மீனவர்கள் கடலில் வலைபோட்டு ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள பாதி அளவு மீன்களை பிடித்து வந்துவிடுகிறார்கள் என்றால் அவர்கள் அடுத்து இரண்டொரு நாட்களில் அப்பகுதியில் மீன் பிடிக்க செல்கையில் பழைய நிலையிலேயே மீனளவு இருக்கும். அந்த அளவிற்கு மீன் உற்பத்தி நடந்து அள்ள அள்ள குறையாத செல்வமாய் மனிதனின் உணவு உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட பங்கை வகிக்கிறது. ஆனால் ஆழ்கடல் மீன்களைப் பிடிக்கும் ராட்சச கப்பல்களோ மீன் உற்பத்தியையே, அதற்கான அடிப்படையையே அழித்து கடல் வளத்தை வற்றுகிற செல்வமாக்கி (Unsustainable development) விடுகின்றன.

கடலின் இயற்கை அமைப்புபடி நடு - ஆழ்கடலில் மீன்கள் எண்ணிக்கை குறைவாகவும் கரையை நோக்கி வரவர மீன்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கிறது. அதேபோல் நடு - ஆழ்கடலில் பெரிய வகை மீன்களும், கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் சிறிய வகை மீன்களும், இரண்டுக்கும் இடைபட்ட ஆழ்கடல் பகுதியில் நடுத்தர வகை மீன்களும் கிடைக்கும். ஆழ்கடலில் கூட மேல்பகுதியில் சிறுவகை மீன்களும் தரையை நோக்கி ஆழத்திற்குச் செல்லச் செல்ல பெரிய வகை மீன்களும் இருக்கும். மீன்களின் வளர்ச்சியைப் பொருத்தே இத்தகைய நிலை உள்ளன. தாவர மற்றும் விலங்கின நுண்ணுயிரிகள், மற்றும் சூரிய ஒளி போன்றவை கடல் நீரின் மேற்பரப்பிலும், ஆழம் குறைந்த கடற்கரையோரங்களிலும்தான் கிடைக்கும் என்பதால் வளரக்கூடிய சிறுமீன்கள் இப்பகுதிகளில் வாழ்கின்றன. இவை வளர, வளரத்தான் ஆழத்தை நோக்கிச் செல்கின்றன. (பருவ காலங்கள், கடல் தட்பவெப்ப நிலைக்கேற்பவும் மீன் வகையினங்களுக்கு ஏற்பவும் மீன்கள் இடம் பெயர்கின்றன. இதனால் கட்டுமர மீன்வர்கள்கூட குறைந்த ஆழத்தில் சில பெரிய வகை மீன்களைப் பிடிப்பதைப் பார்க்கலாம்) அதாவது ஆழ்கடலில்தான் பெரிய மீன்கள் அதாவது தாய் மீன்கள் இருக்கின்றன. இவை லாப நோக்கில் குறுகிய காலத்தில் பெருமளவு பிடித்து அழிக்கப்படுவதால் மீன் உற்பத்தியே குறைந்து போய்விடுகிறது. ராட்சச வகை மீன் பிடிப்பால் ஒரு சில வருடங்களிலேயே ஆழ்கடலில் மீன்கள் இல்லாத நிலை தோன்றிவிடுகிறது.



கடற்கரையோரம் சட்ட விரோதமாக மீன் பிடித்த 150 அந்நிய கப்பல்களை நமது கடற்படையினர் பிடித்துள்ளனர் என்கிறார், குஜராத் மீன் துறை இயக்குனர் எஸ்.வி.கோகலே.

கட்டுமரம் மற்றும் விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும் அந்நிய நாட்டு கப்பல்கள், சிறு கப்பல்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. நமது மீனவர்கள் பயன்படுத்தும் வலை சாதாரணமானவை; இதில் பிடிக்கும் அனைத்து மீன்களையும் வகை பிரித்து - பதப்படுத்தி விற்பனை செய்கிறார்கள். எவையும் வீணாகாமல் உணவாக்கப்படுகின்றன. ஆனால் அந்நிய ஆழ்கடல் மீன் பிடிக்கும் கப்பலிலோ 75% மீன்களை தேவையில்லை என கடலில் கொட்டிவிட்டு 25% மீன்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஏற்றுமதி செய்கிறார்கள். வௌவால் (PUMPRED), கணவாய் (SQUID), இறால் (PRAWN), சூரை (TUNA), சுறாவின் பீலி (FIN OF SHARK), காடு (COD) போன்ற வகை மீன்களால் மட்டுமே லாபம் அதிகம் கிடைக்கின்றன. தேவைப்படும் இவ்வகை மீன்களை மட்டும் பிடிப்பதற்காக வெளிநாட்டு ஆழ்கடல் கப்பல்கள் தூண்டில்கள் போட்டே மீன்பிடிக்க வேண்டும் என்பது விதி. வலை பயன்படுத்தினால் அவ்வலையின் கண் 13 செ.மீ. நீள, அகலத்தில் இருக்க வேண்டும் அதாவது சிறுவகை மீன்கள் பிடிபடாத வகையில் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் விதி. இவற்றை எந்த அந்நிய கப்பலும் கடைபிடிப்பதில்லை. தூண்டில்கள் மூலம் பிடிப்பதுமில்லை; குறிப்பிடப்படும் வலை கொண்டும் பிடிப்பதில்லை. கணிப்பொறியால் வடிவமைக்கப்பட்ட செயற்கை இழைகளாலான வலைகள் (Strudien nets) கொண்டு மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

விதிமுறைக்குப் புறம்பாக நெருக்கமான கண்களைக் கொண்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதிலும் இருவகை உண்டு. ஒரே ஒரு வலையை ஒரு கப்பலைப் பயன்படுத்தி இழுத்துச் செல்லும் மெக்சிக்கன் முறை. ஒரு பெரும் வலையை இரு கப்பல்கள் இருமுனைகளில் இணையாக கட்டி இழுத்துச் செல்லும் பெர்சுயின் முறை. 250 மீட்டர் ஆழம் வரை செல்லக் கூடிய வலை மூலம் 5000 குதிரை சக்தி எந்திரம் பொருந்திய ஒரு கப்பல் குறிப்பிட்ட சில மணி நேரங்களில் ஒரு சுற்றிலேயே ஏறக்குறைய 2000 டன் மீன்களைப் பிடிக்கும் திறன் கொண்டது. இதுவே பெர்சுயின் முறையில் இரு


படிப்பகம்

www.padippakam.com

மடங்கிற்கும் அதிகமாக மீன்கள் பிடிக்க முடிகிறது. தேவையில்லாத 75% மீன்கள் வலையில் சிக்கிய உடனேயே இறந்து விடுகின்றன. இவற்றை நாய், பன்றி, பூனைகளுக்குப் போடுவதற்காக எடுத்துக் கொண்டது போக எஞ்சியவற்றை மீண்டும் கடலிலேயே கொட்டி விடுகிறார்கள். இப்படி பெரிய அளவிற்கு மீன்கள் அழிக்கப்பட்டு கடல் வளமே வறண்டு போய் விடுவதால் சர்வதேச அளவில் பெர்சூயின் முறைக்கு மட்டும் தடை உள்ளது. ஆனால் அந்நிய கப்பல்கள் இன்னும் திருட்டுத்தனமாக இம்முறையைப் பயன்படுத்துகின்றன. பிடிக்கும் 25% மீன்களையும் ஏற்றுமதி செய்து விடுவதால் இந்தியாவைப் பொருத்தவரை 100% மீன்களும் பாழ். மேலும் கொட்டப்படும் 75% இறந்த மீன்களால் கடலின் சுகாதாரம் - சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

ஒரு விசைப்படகில் 500 கிலோ மீன்களை மட்டுமே சேமித்து வைக்கும் வசதியிருக்கிறது. கட்டு மரத்திலோ இதனளவு மிகவும் குறைவு. ஆனால் இதற்காக தோராயமாக ஒரு விசைப்படகில் 12 பேர் வரையும், ஒரு கட்டுமரத்தில் 5 பேர் வரையும் உழைப்பில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 10 லட்சம் பேர் மீன்பிடி தொழில் புரிகிறார்கள். இதுவல்லாமல் படகு தயாரித்தல், வலை பின்னுதல், மீன் பதப்படுத்துதல், மீன் விற்பனை என ஏறக்குறைய 65 லட்சம் பேர் பணிபுரிகின்றனர். இந்த 75 லட்சம் பேரும் அவர்தம் குடும்பமும் மீன்களுடன் தொடர்புடைய தொழில்களும் அத்தொழிலாளர்களும் சேர்த்தால் 5 கோடி பேர் உள்ளனர். இவர்கள் எல்லோரும் அந்நிய மீன்பிடி கப்பல்களால் வாழ்விழந்து தவிக்கும் நிலைக்கு நெட்டித் தள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ள / அனுமதிக்கப்பட இருக்கும் 2600-க்கும் மேற்பட்ட அந்நிய மீன்பிடி கப்பல்கள் மூலமோ 10 லட்சம் இந்திய மீனவர்களில் 3% பேருக்கே வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இதுவும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி இந்தியர்களை வேலைக்கமர்த்திக் கொண்டால்தான் சாத்தியம். தொழில் நுட்பத்தை - தொழில் ரகசியத்தை இந்திய மீனவர்கள் கற்றுக் கொள்ளக் கூடாது என்பதற்காக ஒரு சில மீனவர்களை ஒப்பந்த கண்துடைப்பிற்காக வேலைக்கமர்த்தி வீட்டிலேயே வைத்து சம்பளம் கொடுக்கின்றன, பன்னாட்டு கம்பெனிகள்.

தமிழகத்தில் சென்னை மீன்பிடி துறைமுகத்தில் தைவான் நாட்டைச் சேர்ந்த 25 சிறு கப்பல்கள் வந்து இரண்டு மாதங்களாக மீன்பிடித்தும், வேலைக்கமர்த்திய ஒரு இந்திய மீனவரைக்கூட உடன் அழைத்துச் செல்லவில்லை.

சென்னை மீன்பிடி துறை முகத்தில்


கோவா கடற்கரையோரம் மீன்களைப் பிடிக்கும் ரஷ்ய கப்பல்

உள்ள 1000-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும், சென்னை - செங்கை மாவட்டங்களில் உள்ள 27 ஆயிரம் கட்டுமர படகுகளும் ஆழ்கடல் அந்நிய மீன் பிடிப்பில் உடனடி பாதிப்பை சந்தித்துள்ளன. கடலின் மீன் குறைந்ததால் 30% படகுகளுக்கு மேல் தொழிலுக்குச் செல்லாமல் பருவகாலத்தில் கூட கரையில் ஒதுங்கி நிற்கும் நிலை தோன்றியுள்ளது.

தைவானின் சிறு கப்பலில் பனிக்கட்டி உற்பத்தி செய்யும் முறையில்லாததால் சென்னையில் பனிக்கட்டி உற்பத்தியகங்களில் லட்சக்கணக்கில் முன்பணம் கட்டி பெற்றுக் கொள்வதால் பனிக்கட்டி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 5,6 விசைப்படகுக்குரிய பனிக்கட்டிகளை தைவானின் ஒரு சிறு கப்பல் எடுத்துக் கொள்கிறது. மேலும் தைவான் கப்பல் முதலாளிகள் குறைவான எடையுள்ள பனிக்கட்டிக்கு கூட கூடுதல் விலை கொடுத்து வாங்குவதால் பனிக்கட்டியின் விலையும் ஒரு மடங்கு கூடி விட்டது. இதனால் ஒரு விசைப்படகுக்கு பனிக்கட்டிக்கு 1000 ரூபாய் செலவு செய்து கொண்டிருந்தவர்கள் இன்று 3000 ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறார்கள்.

மீன் வரத்தும் குறைந்து போய், செலவும் கூடிய நிலையில் தொழிலில் நட்டத்தை பலர் சந்தித்து வருகின்றனர்.

> **ராட்சச ஆழ்கடல் மீன் பிடிப்பால் பல வளர்ந்த நாடுகளின் மீன் வளம் குறைந்து போனதாலேயே அந்நிய கம்பெனிகள் இந்திய கடற்பரப்பிற்குள் நுழைந்துள்ளன.**

பிடிக்கும் மீனில் - அதன் விலையில் 80% படகு உரிமையாளருக்கும் 20% மீன்பிடித்த மீனவர்களுக்கும் என்ற விகிதாச்சார கூலிமுறை இருப்பதால் மீனவத் தொழிலாளர்களும் உடனடி பாதிப்பை சந்தித்துள்ளனர்.

கரையிலிருந்து 200 நாட்டிகல் மைல் (320 கி.மீ) வரையுள்ள கடல் பரப்பு அந்தந்த நாட்டின் எல்லை என 1982-இல் ஐ.நா. சபையில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன் தீர்மானிக்கப்பட்டிருந்த எல்லை 12 நாட்டிகல் மைல் ஆகும். பழைய வழமையான மீன்பிடிப்பு பொதுவாக எல்லா நாடுகளிலும் 12 நாட்டிகல் மைலுக்குள் நிகழ்ந்து வந்ததால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்று நவீன வசதிகளுடன் கட்டுமர மீனவர்களே 25 கி.மீ. தூரம் வரையும், விசைப்படகு மீனவர்கள் 70 கி.மீ. தூரம் வரையும் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வருகிறார்கள். இந்திய அரசோ அந்நிய நாட்டு ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களுக்கு 12 முதல் 200 நாட்டிகல் மைல் வரை மீன் பிடிக்க அனுமதி வழங்கி நமது மீனவர்களை 12 நாட்டிகல் மைலுக்குள் மீன் பிடிக்கும்படி நிர்ப்பந்திக்கிறது.

அந்நிய மீன்பிடி கப்பல்கள்; ராட்சச மீன்பிடிப்பு முறையால் ஆழ்கடலில் மீன் குறைந்து மெல்ல கரையை நோக்கி முன்னேறி வருகின்றன. தற்போது விதிமுறைக்குப் புறம்பாக 12 நாட்டிகல் மைலுக்குள்ளும் வந்து அந்நிய சிறு கப்பல்கள் மீன் பிடிக்கின்றன. இதனால் நமது மீனவர்களுக்கு மீன் கிடைக்காமல் செய்வதோடு மிதவை வலைகளை நாசமாக்கியும் நட்டத்தை ஏற்படுத்துகிறார்கள்.

மேலும் அந்நிய கப்பல்கள் கரையை நோக்கி வரவர விசைப்படகு மீனவர்களும் கரையை நோக்கி வந்து மீன் பிடிக்க நேரிடுகிறது. இது கட்டுமர மீனவர்களை பெரிதும் பாதிப்பதும் கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் உள்ள முரண்பாட்டை — சண்டைகளை வளர்க்கவும் செய்கிறது.



படிப்பகம்


www.padippakam.com

மேலும் அந்நிய பெரிய கப்பல்கள் விதி முறை மீறி குறைந்த ஆழமுள்ள பகுதிகளில் வருவதால் கடலடி தாவரங்கள் அழிக்கப்படுகின்றன; கடலடி மணலில் பள்ளங்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் மீன்களின் உணவு பற்றாக்குறையும் கடல் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது.

ஆழ் கடல் மீன்பிடிப்புக்கு அந்நிய - பன்னாட்டு கம்பெனிகளை அனுமதித்ததற்கு இந்திய அரசு முன்வைக்கும் காரணங்களும் வாதங்களும் நேர் முரணானவை, அயோக்கியத்தனமானவை; வழங்கியுள்ள சலுகைகளோ பல.

''ஆழ்கடல் வளம் அதிகம் இருக்கிறது; அவற்றை பிடிப்பதற்குரிய போதிய கப்பல்களோ, தொழில் நுட்ப வசதியோ இந்தியர்களிடம் இல்லை'' என்பது இந்திய ஆட்சியாளர்கள் கூறுகிற மையமான காரணம். ஆனால் சில முன்னேறிய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட அந்நிய தயாரிப்பு கப்பலை விலைக்கோ, குத்தகைக்கோ வாங்கி ஏற்கனவே இங்கு ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வந்த இந்தியர்களால் ஆழ்கடல் வளம் குறைந்து போனது என்பதுதான் உண்மை. மிச்சமிருக்கும் வளத்தையும் அடியோடு துடைத்து அள்ளிச் செல்வதற்கே அதிநவீன தொழில்நுட்ப முறை கொண்ட அந்நிய கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவிலேயே மீன் உற்பத்தி குறைந்து விட்டது. 80-களின் தொடக்கத்தில் உலகின் வடக்குப்பகுதி கடற்பரப்பில்தான் அதிக மீன்வளம் இருந்ததால் ஏகாதிபத்தியங்கள் அப்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு முக்கிய கவனம் செலுத்தின. ஏகாதிபத்தியங்கள் தமக்குள்ளும் பல நாடுகளுடனும் பல ஒப்பந்தங்கள் போட்டன. ஒப்பந்தங்களை மீறி போட்டி போட்டுக் கொண்டு மீன் பிடிப்பில் ஈடுபட்டு போரிட்டுக் கொண்டன. இன்று ஏறக்குறைய அப்பகுதியின் ஆழ்கடல் வளம் வறண்டு விட்டது. மீன்பிடிப்பு தொழில்கள் நட்டமாகி பலநாடுகள் மானியங்கள் கொடுத்து இயக்கி வருகின்றன. இதனால் ஒப்பந்தங்களை - விதிமுறைகளை மீறி அடுத்தவரின் எல்லைக்குள் புகுந்து மீன்களை வேட்டையாடுகிற வெறியும் போட்டியும் சண்டைகளும் முற்றியுள்ளன. 80-களின் மத்தியிலும் இறுதியிலும் ஏகாதிபத்தியங்கள் உலக கடற்பரப்பில் வடக்கு அல்லாத பிற பகுதிகளை நோக்கி நகர்ந்தன. இதனால் ஆழ்கடல் மீன் பிடிப்பு தொடர்பான மோதல்கள் உலகில் பரவலாக நடந்தன. ஸ்பெயின் - பிரிட்டனுக்கும் இடையில் இடைவிடாது மோதல்கள் நடக்கின்றன. கனடா, அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் நடந்த மோதல்களும் இவைகளுக்குள் அண்மையில் சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. சைனா, ரஷ்யா, ஜப்பான் நாடுகள் தெற்கு, கிழக்கு ஆசிய நாடுகளுடன் அடிக்கடி சண்டையிட்டு வருகின்றன.



சட்ட விரோதமாக வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் அந்நியக் கப்பல்

ஆழ்கடல் மீன்பிடிப்பின் ராட்சச கப்பல்களினால் பல வளர்ந்த நாடுகளின் மீன் வளம் - உற்பத்தி குறைந்து போனது. 90-களில் இந்த நெருக்கடியைப் போக்க ஏகாதிபத்தியங்கள் இருவகையில் முயற்சியெடுக்கின்றன. ஒன்று உலகின் தெற்கு கிழக்கு கடல் பிராந்தியங்களில் மற்றும் பிற வளரும் நாடுகளின் கடற்பரப்பில் ! உள்ள மீன் வளத்தைக் கொள்ளையிடுவது. மற்றொன்று செயற்கை முறையில் உப்பு மற்றும் நன்னீரில் மீன் வளர்ப்பு பண்ணைகள் அமைப்பது. இவற்றிற்காக வளரும் நாடுகளை நிர்பந்திப்பது.

இது போன்று பல்வேறு துறையில் ஏற்பட்ட நெருக்கடியைப் போக்குவதற்காக ''காட்'' மற்றும் உலக வர்த்தக கழகம் (WTO) ஆகியவை மூலமாக ஏழை நாடுகளை கொள்ளையிட உலக வர்த்தகம் - உலக சந்தை என்ற வழியை உருவாக்கியுள்ளன, வல்லரசு நாடுகள். இந்த ''காட்'' ஒப்பந்தத்தின் ஒரு பிரிவான ட்ரிம்ஸ் *(TRADE RELATED INVESTMENT MEASURES)* என்பதன் கீழ் பன்னாட்டு கம்பெனிகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு அனுமதிப்பது தொடர்பான நிபந்தனைகள் உள்ளன.

காட் மற்றும் உலக வர்த்தக கழக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு பன்னாட்டு கம்பெனிகளுக்கு ஆழ்கடல் மீன் பிடிப்பு அனுமதி வழங்கிய ஆட்சியாளர்கள், ஏதோ இங்கு கடல்வளம் அதிகமிருப்பதாகவும் அதை அன்னிய செலாவணி வருமானமாக மாற்றி நாட்டின் நிதிப்பற்றாக்குறையைப் போக்கப் போவதாகவும் பித்தலாட்டம் செய்கிறார்கள். ஏற்கனவே இங்கு இந்திய மீனவர்கள் ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் அன்னிய செலாவணி வருமானத்தைக் காட்டிலும் பெரிய அளவிற்கு பன்னாட்டு கம்பெனிகளை ஆழ்கடல் மீன்பிடிப்பில் அனுமதித்தன் மூலம் கிடைக்கப் போவதில்லை.

ஏனெனில் பன்னாட்டு கப்பல்கள் இங்கு பிடிக்கும் மீன்களின் அளவிற்கு கட்டுப்பாடோ, அளவீடோ, சோதனையோ எதுவுமில்லாமல் ஏற்றுமதி செய்து கொள்ள இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. பல நாடுகள் அந்நிய நாடுகளின் மீன்பிடி கப்பலுக்கு இவ்வளவு டன்னுக்கு மேல் பிடிக்கக் கூடாது என்றும் பிடிக்கும் மீன்களில் இவ்வளவு சதவிகிதத்தை தங்களிடம் விற்பனை செய்ய வேண்டும் என்றும் விதிகளோடு ஒப்பந்தங்கள் போட்டுள்ளன. ஆனால் இந்திய அரசு எவ்வித நிபந்தனையும் உருப்படியாகப் போட வில்லை.

பன்னாட்டு ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களின் எல்லையை தீர்மானிக்கும் சட்ட திருத்த மசோதாவைக் கூட இப்பொழுதுதான் நடப்பு பாராளுமன்ற கூட்டத்தொடரில் கொண்டு வருவதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறது. பன்னாட்டு கப்பல்கள் இங்கு மீன் பிடிப்பதற்கும் மீன்களை ஏற்றுமதி செய்வதற்கும் குத்தகை அனுமதி கொடுத்து ஒரு தோராயமான நிலையான கமிஷனை மட்டுமே இந்திய அரசு வருமானமாகப் பெறுகிறது. இது பன்னாட்டு கம்பெனிகள் ஈட்டும் கோடிக்கணக்கான லாபத்தில் ஒரு ஆயிரம் ரூபாயை பிச்சை போடுவதற்கு சமமானது.

மேலும் கட்டுமர மீனவர்களின் தொழிலைப் பாதிக்காத வண்ணம் விசைப்படகு மீனவர்களுக்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. கேரள மாநில அரசோ மீன்கள் அதிகம் கிடைக்கும் பருவகாலங்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு


படிப்பகம்

www.padippakam.com

விசைப்படகுகள் மீன் பிடிக்கக் கூடாது என்று தடையே விதித்துள்ளது. ஆனால் இந்திய அரசு, பன்னாட்டு கப்பல்களை எந்த காலத்திலும் எந்த பகுதியிலும் மீன் பிடிக்க தாராள அனுமதி வழங்கியுள்ளது. அதே போல் விசைப்படகு உரிமையாளர்களுக்கு ஒரு லிட்டர் டீசலை 8 ரூபாய்க்கு தருகிற மத்திய அரசு பன்னாட்டு மீன் பிடி கப்பல்களுக்கும், சிறு கப்பல்களுக்கும் சர்வதேச சந்தை விலையில் 2 ரூபாய்க்கு தருகிறது.

12 நாட்டிகல் மைல்களுக்குள் பன்னாட்டு கப்பல்கள் மீன்பிடிக்காமல் தடுப்பதற்கோ, ஆயுதங்கள் - போதை மருந்துகளை கடத்துவதை தடுப்பதற்கோ, சோதிப்பதற்கோ இந்திய அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பன்னாட்டு கப்பல்கள், ரேடார், கம்ப்யூட்டர், விண்கோள், விமான உதவியுடன் ஆழ்கடல் மீன்களை அழிப்பதோடு களவு-கடத்தல்-ரகசிய வேலைகளையும் செய்கின்றன. இந்தியக் கடலில் பிடித்த மீன்களை அந்நிய சிறு கப்பல்கள் தரைக்கு கொண்டு வராமலேயே நடுக்கடலில் மீன் பிடிக்கும் தமது பெரிய கப்பல்களுக்கு கொண்டு சென்று கொட்டுகின்றன. அங்கிருந்து பதப்படுத்தி, டின்களில் அடைத்து விமானம் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்திய அரசோ எவ்வித அடிப்படை வசதியும் செய்து தராததோடு கப்பல் படையைத் கொண்டு சோதனை என்ற பெயரில் படகு மற்றும் விசைப்படகு மீனவர்களைத்தான் அதிகம் தொல்லை செய்கிறது. ராமேஸ்வரம், கன்னியாகுமரி பகுதிகளிலோ இத்தொல்லையோடு இலங்கை கடற்படை சோதனையும் தாக்குதலும் கூடுதல் பாதிப்பாக உள்ளன.

பன்னாட்டு முதலாளிகளுக்கு சலுகைகளை வாரியிறைத்த இந்திய அரசு, மீனவர்கள் நலனுக்கு விரோதமாகவே செயல்பட்டுள்ளது. மீனவர்களுக்கென்று, மீன்பிடித் தொழிலுக்கென்று ஒரு தனி அமைச்சகம் இல்லை. மீனவர் நலனை (Welfare) விவசாய அமைச்சகத்திலும், மீன் தொழிலை (Industry & Profession) உணவு பதப்படுத்துதல் (Food Processing) அமைச்சகத்திலும் மீன் ஏற்றுமதியை வணிகத்துறையிலும் (Commerce) சேர்த்து விட்டது. இது மீனவர் நலனை புறந்தள்ளி மீன் ஏற்றுமதி லாபத்தை முக்கியப்படுத்தி செய்த பிரிப்பாகும். பன்னாட்டு கம்பெனிகள் கொள்ளையிடுவதற்கும் மிகவும் வசதியானதும் கூட.

வணிகத் துறை மூலம் ஏற்றுமதி மீனுக்கென்று ஒரு தரம் நிர்ணயித்து சோதிக்கும் புதிய முறையை புகுத்த உள்ளனர். இதனால் பழமையான முறையில் பதப்படுத்துதல் தொழில் புரியும் சிறு கூட்டங்கள் மீன்களை ஏற்றுமதி செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளாகும். மீன்களை ஏற்றுமதி நிலைக்கு தயார்படுத்துகிற உற்பத்தி பிரிவு பெருமளவு கைத்தொழிலாகவும் பெண்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பதப்படுத்தும் தொழிலிலும் இங்கு நுழைந்து பன்னாட்டு கம்பெனிகள் ஆதிக்கம் செய்வதற்காக குடியிருப்பு பகுதிகளில் இத்தொழிற்கூடம் இருக்கக் கூடாது என்ற விதியும் கொண்டு வர முயலுகிறார்கள், ஆட்சியாளர்கள். இதற்கிணங்க ''அந்நிய கப்பல் மீன் பிடிப்புக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் பதப்படுத்தும் தொழில் நவீன முறையில் இங்கு இல்லை'' என்று பேசி வருகிறார்கள் அதிகாரிகள்.

ஒருபுறம், கடலில் இறாலும் சுறாவும் பிற மீன் வளமும் அதிகம் இருப்பதாகக் கூறி ஆழ்கடல் மீன்பிடிப்பில் பன்னாட்டு கம்பெனிகளை அனுமதிக்கிறார்கள். மறுபுறம், கடலில் இறால் மீன் வளம்



**ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளில் பிடிக்கும் மீன்களை அந்நிய கப்பல்கள், தமது தாயக துறைமுகங்களுக்கு ரகசியமாக கடத்துகின்றன என்கிறார், மஹாராஷ்டிராவின் முன்னாள் மீன் துறை இயக்குனர் சி.வி.குல்கர்னி.**

குறைந்து விட்டது என்று கூறி செயற்கை இறால் பண்ணைகளைத் தொடங்க அனுமதிக்கிறார்கள். பன்னாட்டு கம்பெனிகளின் கொள்ளைக்கும், பன்னாட்டு மேட்டுக் குடிகளின் சுவையான புரத உணவுக்கும் சேவை செய்வதுதான் இந்திய ஆட்சியாளர்களுக்கு நோக்கம், தலையாய கடமை. அதற்காக சொல்கிற காரணங்களைப்பற்றி கவலையில்லை.

பன்னாட்டு கப்பல்களுக்கு ஆழ்கடல் மீன் பிடிக்க அனுமதித்ததற்கு எதிராக மீனவர்கள் இந்திய அளவில் போராடி வருகிறார்கள். குறிப்பாக கோவா, கேரளாவில் எதிர்ப்பு போர்க்குணத்துடன் வெளிப்பட்டது. பன்னாட்டு கப்பல்களை மறித்து துரத்தியடித்த சம்பவங்களும் உண்டு. நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு தூத்துக்குடி அருகே இடிந்தகரை மீனவர்கள் பல நூறு படகுகளுடன் அந்நிய கப்பலை துரத்தியடித்தனர். கடந்த மே மாதம் இந்திய அளவில் மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதன் விளைவாக இனிமேல் அந்நிய கப்பல்களுக்கு உரிமம் கொடுப்பதில்லை என்றும் ஏற்கனவே கொடுத்தவற்றிற்கு ஆய்வு சோதனை மேற்கொண்டு கட்டுப்படுத்துவதாகவும் மத்திய அரசு அறிவித்ததே ஒழிய எதுவும் நடக்கவில்லை. தொடர்ந்து ரகசியமாக உரிமம் வழங்கப்படுகிறது. மேலும் பன்னாட்டு கம்பெனிகளுக்கு சோதனை மீன் பிடிப்பு (TRIAL FISHING) என்ற பெயரில் 6 மாத கால அனுமதி கொடுத்து, அவர்களுக்கு மீன் பிடிப்பது லாபகரமாக இருக்கிறது என்று விண்ணப்பித்தால் மட்டுமே பிறகு நிரந்தர அனுமதி கொடுப்பது என்று ஒரு முறையையும் மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இப்படி குறுக்கு வழிகளை இந்திய ஆட்சியாளர்கள் உருவாக்குவதும் அதன் வழியே பன்னாட்டு கம்பெனிகள் நுழைவதும்தான் நடக்கிறது.

கேரளாவில் மட்டும் மீனவர்களின் எதிர்ப்பை சமாதானப்படுத்துவதற்காகவும் ஆதாயம் கருதியும் அந்நிய கப்பலை இரண்டு மாதத்திற்கு மட்டும் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டாம் என்ற ஒரு உத்தரவு கூட போட்டார்கள். ஆனால் பன்னாட்டு கம்பெனிகளின் மீன்வளக் கொள்ளை நிற்கப் போவதில்லை. ஏனெனில் முன்னாள், இன்னாள் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பெயருக்கு ஒரு இந்திய கம்பெனியை உருவாக்கி பன்னாட்டு கம்பெனிகள் கூட்டு ஒப்பந்த முறையில் நுழைவதற்காக வழி செய்து கொடுத்து ஏராளமாக கையூட்டு பெற்றுள்ளனர். இதை மாநிலங்களுடன் கலந்தாலோசிக்காமல் மத்திய அரசாங்கமே ரகசியமாக செய்து முடித்துவிட்டதால் தமக்கு பங்கு கிடைக்காமல் போன ஆத்திரத்திலும் மீனவர்கள் ஓட்டு ஆதாயம் கருதியுமே ஜெயா போன்றவர்கள் அந்நிய ஆழ்கடல் மீன்பிடிப்பை எதிர்த்து நாடகமாடுகிறார்கள்.

இறால் பண்ணைகள், ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் பதப்படுத்தும் தொழில் மூலமாக பன்னாட்டு கம்பெனிகள் இந்திய மீனவர்களின் கழுத்தை நெறித்து வருகின்றன. 75 லட்சம் இந்திய மீனவர்கள் வாழ்வு கேள்விக்குறியாகி உள்ளது. கடல், நீர் சார்ந்த இயற்கை வளங்கள் அழிவதும் இதனால் சத்தான உணவு உற்பத்தி பற்றாக்குறை (இந்தியாவில் மீன் உணவருந்துபவர்கள் 30 கோடி பேர்) நிகழ்ந்து மக்கள் பாதிக்கப்படுவதும் உறுதியாகி விட்டது. எனவே, ''ஆக்டோபஸ்'' போல் சகல துறைகளிலும் பரவி இறுக்கிப் பிடித்து வரும் பன்னாட்டு கம்பெனிகளின் கரங்களை வெட்டி வீழ்த்தினால் தான் விடிவு கிடைக்கும்.

• ராசு



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்க

### 'மார்க்சிஸ்டு'களின் பச்சோந்தித் தனம்

நடந்து முடிந்த கல்கத்தா மாநகராட்சி தேர்தலில் 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் மொத்தமுள்ள 141 தொகுதிகளில் 70 இடங்களில் வெற்றி பெற்றனர். பெரும்பான்மைக்கு ஒரு இடம் குறைவான காரணத்தினால் பதவி சுகம் தங்கள் கைகளை விட்டு நழுவிப் போகாதிருப்பதற்காக, இத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள ஜுன்னு அன்சாரி எனும் கிரிமினல் பேர்வழியைத் தங்கள் அணியுடன் சேர்த்துக் கொண்டுள்ளனர். ஒரு சமயத்தில் 'மார்க்சிஸ்டு'களின் வங்க மொழி நாளேடான ஜனசக்தி இவனை மிகக் கொடிய இரகசிய உலகப் பேர்வழி என குற்றஞ் சுமத்தியிருந்தது. மேலும் இவன் மீது பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் முஸ்லீம் எதிர்ப்பு கலவரத்தைத் தூண்டிவிட்டு படுகொலைகள் நடத்தியதற்கான வழக்குகளும் உள்ளன. இந்த லட்சணத்தில் தான் இப்போலிகள் அரசியல் கிரிமினல் மயமாகி வருகிறது என நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

### மாஸ்கோவில் மாபெரும் எழுச்சிப் பேரணி

கடந்த மே மாதம் மாஸ்கோவில் இரண்டாம் உலகப் போரின் 50-ஆம் ஆண்டு நிறைவு தினத்தையொட்டி 3 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கைகளில் செங்கொடியினை ஏந்திக் கொண்டு, "சோவியத் அதிகாரம்", "சோவியத் யூனியன்" என முழக்கமிட்டு பிரம்மாண்டமான பேரணியினை நடத்தினர். அதே நாளில் அதிபர் யெல்ட்சின் இதனைக் கொண்டாட, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன் அதிபர்களுடன் கைகோர்த்து திரிந்ததைக் கண்டித்தும் முழங்கினார்கள் இவர்கள். ஊர்வலத்தில் வந்த இரண்டாம் உலகப் போர் வீரர்கள் யெல்ட்சின் தங்களுக்கு அளித்த யுத்த நினைவுப் பதக்கங்களை கழற்றி வீசியெறிந்தனர். முன்னாள் சோவியத் யூனியனில் அங்கம் வகித்த உக்ரேய்ன், தாஜிக்கிஸ்தான், பால்டிக் குடியரசுகள் உள்ளிட்ட பல நாடுகளிலும் செங்கொடியுடன் மக்கள் இத்தகைய ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.



அணு ஆயுதப்பரிசோதனையை எதிர்த்து பாரிசில் நடந்த ஆர்ப்பாட்டம்

### சின்னாம்பதி சம்பவத் தீர்ப்பு

கடந்த வருடம் ஜுன் மாதம் கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள சின்னாம்பதி கிராமத்தில் புகுந்த சிறப்பு அதிரடிப் படையினர் இரு மலைவாழ் பெண்களைப் பாலியல் பலாத்காரப் படுத்தியதோடு, அக்கிராமத்தைச் சேர்ந்த ஏழு பேரைக் கொடூரமான முறையில் தாக்கிவிட்டு இரவோடு இரவாகத் தப்பிவிட்டனர். இவ்வழக்கை விசாரித்த கூடுதல் மாவட்ட நீதிபதி பானுமதி தலைமையில் அமைந்த விசாரணை கமிஷன், சிறப்பு அதிரடிப் படையினரைக் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்துள்ளது. "போலீசார் இவ்வழக்கை உடனடியாகப் பதிவு செய்ய மறுத்து விட்டதால், தனிப்பட்ட குற்றவாளிகளை கமிஷனால் அடையாளங் காட்ட முடியவில்லை" என தீர்ப்பில் அந்நீதிபதி குறிப்பிட்டுள்ளார். மேலும், பேரூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ ராஜு, போலீஸ் துறையைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள், மாவட்ட வளர்ச்சி அதிகாரி ஆகிய நால்வரும் இப்பாதகச் செயலை மூடி மறைத்து விட எல்லா வழிகளிலும் முயன்றனர் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

### கடலில் நடந்த கைகலப்பு

பிரான்சில் பதவியேற்றுள்ள புதிய அரசு இவ்வருடம் ஆகஸ்டு தொடங்கி அடுத்தடுத்து எட்டு அணுகுண்டுகளை வெடிக்கச் செய்து பரிசோதனைகளை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. இதை எதிர்த்து பிரான்சின் பசுமைக் கட்சியினைச் சேர்ந்த சுற்றுச்சுழல்வாதிகள் தலைநகர் பாரீசில் தொடர்ந்து மூன்று நாட்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து, பிரான்சு அணுப் பரிசோதனைகளை நடத்தும் தெற்கு பசிபிக் கடல் பகுதியைச் சேர்ந்த முருரோ தீவினை நோக்கிச் சென்ற இவர்களது கப்பல்களை, பிரான்சு நாட்டின் 150 கடற்படை அதிரடிப் படையினர் சூழ்ந்து கொண்டு கண்ணீர் புகை குண்டுகளை வீசித் தடுத்து நிறுத்தினர். ஒன்றரை மணி நேரம் நடந்த இப்போராட்டத்தின் பின் பத்து ஆர்ப்பாட்டக்காரர்களை விசாரணைக்காக கைது செய்துள்ளது பிரெஞ்சு அரசாங்கம்.

### அதிரடிப் படையினரின் அட்டூழியம்

கடந்த மாதம் 24-ந் தேதியன்று நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் போராளிகள் அஸ்ஸாம் மாநிலத்தில் வடக்கு கசார் குன்றுப் பகுதியில் ஆறு பஞ்சாப் அதிரடிப் படையினரைக் கொன்றொழித்து விட்டனர். இதனால் ஆத்திரமாகிப் போன அப்படைப்பிரிவினர் அக்குன்றுப் பகுதியில் உள்ள ஹப்லாங் எனும் நகரில் தெருக்களில் நடந்து சென்று கொண்டிருந்த அப்பாவி பொதுமக்களைத் தாக்கியிருப்பதோடு, வாகனங்கள், பொதுச் சொத்துக்களையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் காரணமாக பொதுமக்கள் மத்தியில் இப்படையினர் மீது அதிருப்தி அதிகரிக்கவே, மாநில நிர்வாகம் இப்படைபிரிவினரை இக்குன்று பகுதியில் இருந்து திருப்பி அனுப்பிவிடப் போவதாக அறிவித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

சர்வமும் கிரிமினல்மயம்: வோரா அறிக்கை ஒப்புதல்

# இன்றைய ஆட்சி மொழி: "வன்முறையே வெல்லும்!"

முன்னாள் உள்துறை செயலாளரான என்.என்.வோரா தலைமையிலான குழுவின் அறிக்கை நடப்பு பாராளுமன்ற கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்டு விவாதப் பொருளாகியுள்ளது. பம்பாய் குண்டு வெடிப்புகளில் தாவூத் இப்ராஹிம், மெமன் குடும்பத்தினர் தொடர்புகள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்புகள் பற்றி சர்ச்சை எழுந்த பின், மாஃபியாக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்பை ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மத்திய அரசு வோரா குழுவை நியமதித்தது. 1993 ஜூலை மாதம் நியமிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கை அரசு நிபந்தனைப்படி மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் காங்கிரசு 2 வருடமாக மறைத்து வைத்துவிட்டு திடீரென அக்கறை வந்தது போல் எடுத்து பாராளுமன்றத்தில் முன்வைத்ததற்கு தந்தூரி - நைனா சாஹ்னி கொலை வழக்கே காரணம்.

இளைஞர் காங்கிரசுப் பெண் நைனா சாஹ்னியை அவரது காதலனும் இளைஞர் காங்கிரசு பிரமுகரும் தொழிலதிபருமான சுசில் சர்மா டில்லியில் கொலை செய்து உணவு விடுதி அடுப்பில் வைத்து எரித்து சாம்பலாக்கினான். இச்சம்பவம் வெளிவந்து காங்கிரசு கட்சி அம்பலப்பட்டு தனிமைப்பட்டது. கிரிமினல்களின் கூடாரமாக காங்கிரசு கட்சி உள்ளது என்று பத்திரிகைகளும் எதிர்கட்சிகளும் தாக்குதல் தொடுத்தன. எதிர்வரும் தேர்தல் ஆதாயத்தைக் கணக்கில் கொண்டு நடப்பு பாராளுமன்ற கூட்டத் தொடரில் பிரச்சினை கிளப்பி காங்கிரசு கட்சியை மேலும் சந்தி சிரிக்க வைக்க எதிர்கட்சிகள் திட்டமிட்டன.

இதை முறியடிக்கும் பொருட்டு வோரா அறிக்கை ராவ் கும்பலால் நரித்தந்திரமாக முன் வைக்கப்பட்டது. கிரிமினல்கள் அரசியலில் இருப்பது அல்லது அரசியல்வாதிகளுடன் கள்ள உறவு கொண்டிருப்பது என்பது காங்கிரசுக்கு மட்டுமல்ல எல்லா கட்சிகளிடமும் உள்ள பொதுவான அம்சம் என்றும் சுசில் சர்மா விவகாரத்தைப் பின்னுக்குத் தள்ளி வோரா அறிக்கை - பற்றி விவாதிப்பதுதான் முக்கியமானது என்றும் பிரச்சினையை திசை திருப்பி தன்னை தனிமைப்படுத்தி தாக்குவதிலிருந்து தப்பித்துக் கொள்ள திட்டமிட்டது. காங். கும்பல். எதிர் பார்த்தபடியே வோரா அறிக்கை பற்றிய விவாதம் இன்று முதல் நிலைக்கும் வந்துவிட்டது.

வோரா குழு, ரா - ஐ.பி. - சி.பி.ஐ. ஆகிய உளவு நிறுவன உயரதிகாரிகளிடமிருந்தும் வருமான வரித்துறை, போதைப் பொருள் கட்டுப்பாட்டுக் குழு போன்ற அமுலாக்கப்பிரிவு அமைப்புகளின் (Enforcement Agencies) உயரதிகாரிகளிடமிருந்தும் விவரங்களைத் திரட்டியது. இக்குழுவின் ஆய்வு முறையும் முன்வைத்துள்ள ஆலோசனை - தீர்வுகளும் முழுக்க ஒரு அதிகார வர்க்க - நிர்வாக சீர்திருத்த கண்ணோட்டத்திலானவையாகும். இந்த வகையில் இன்றைய ஆளும் வர்க்க கும்பலுக்கு விசுவாசமாகவே வோரா குழு செயல்பட்டிருக்கிறது என்பது தெளிவு. எனினும் மாஃபியாக்களுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள தொடர்பையோ அரசியல் கிரிமினல் மயமாகி வருவதையோ இதுவரை அரசு ஒத்துக் கொண்டதில்லை; பத்திரிகைகளில் ஏராளமான ஆதாரங்கள் அம்பலமாகியும் மறுத்தே வந்தது. தற்போது அரசு இவற்றை வோரா குழு அறிக்கை மூலம் ஒத்துக் கொண்டுள்ளது, குறிப்பிடத்தக்க ஒன்று.

வோரா குழு சமர்ப்பித்த 12 பக்க அறிக்கையில் உள்ள சாரம் இவைதான்:

பெரிய நகரங்களில் உள்ளூரளவில் கள்ளச் சாராயம், சூதாட்டம், விபச்சாரம் போன்ற சிறுவகை கிரிமினல் குற்றங்களை செய்து வந்தவர்கள்தான் நாளடைவில் வளர்ந்து ஒன்று திரட்டப்பட்ட ஒரு மாஃபியா கும்பலாக மாறுகிறார்கள். துறைமுக நகரங்களில் கடத்தல், இறக்குமதி பொருட்களை விற்றல், போதைப் பொருள் கடத்தல் என்பவை மாஃபியாக்களின் வேலைகளாக உள்ளன. பெரிய நகரங்களிலோ நிலத்தையும் கட்டிடங்களையும் வளைத்துப் போட்டுக் கொள்வது, குடித்தனக்காரர்களை மிரட்டி விரட்டியடிப்பது அச்சொத்துக்களை குறைந்த விலைக்கு கைப்பற்றிக் கொள்வது என்ற முறையில் "ரியல் எஸ்டேட்" தொழில் நடத்துகிறார்கள். இப்படி சம்பாதித்து பணபலம் பெறும் கும்பல், அதிகாரிகள் அரசியல்வாதிகளின் தொடர்புகளைக் கட்டியமைத்துக் கொண்டு தமது சமூக விரோத செயலை விரிவுபடுத்துகிறார்கள்; தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். பணபலம் மாஃபியாக்களின் குண்டர் பலத்தை பெருக்க பயன்படுகிறது. இக்குண்டர் பலத்தை அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சிறுநகரங்கள், கிராமங்களில் கூட குண்டர்கள் - ரௌடிகள்தான் ஆதிக்கம் செய்கிறார்கள். மாஃபியா கும்பலின் ஒரு பகுதி தொழில், கூலிக்கு கொலை செய்வதுமாகும். கிரிமினல் கும்பல்கள், போலீசு, அதிகார வர்க்கம், அரசியல்வாதிகளுக்கு இடையிலான கள்ள உறவு இருப்பது நாட்டின் பல பகுதிகளில் தெளிவாக வெளிவந்துள்ளது. தற்போது இருக்கும் கிரிமினல் தொடர்பான நீதிமுறை தனிப்பட்ட குற்றவாளிகளை - கிரிமினல்களை தண்டிப்பதாக உள்ளதே ஒழிய மாஃபியா கும்பலின் மொத்த செயல்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கும்படியானதாக இல்லை. பொருளாதார ரீதியான குற்றங்களைத் தடுப்பதற்காக இருக்கிற சட்ட திட்டங்களும் - பலவீனமானவையாக உள்ளன. மாஃபியாக்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வதில் உள்ள சட்ட சிக்கல்கள் கடக்க முடியாதவையாக உள்ளன.

மாஃபியா கும்பலுக்கு எதிராக உள்ளூரளவில் மத்திய - மாநில அரசுகளின் அமுலாக்கப் பிரிவு அமைப்புகள் - கலால், சுங்கத்துறை, வருமான வரி துறை முதலியவைகள் - உரிய நேரத்தில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பம்பாயில் எண்பதுகளில், இக்பால் மிர்சி என்பவன் கப்பலில் சாராயம், சிகரெட் விற்பனை செய்து கொண்டு இருந்தான். தற்போது 'ரியல் எஸ்டேட்' தொழில் செய்து கோடிக் கணக்கில் பொருளீட்டியுள்ளான். வங்கிகளிலும், பிறவற்றிலும் ஏராளமாக மூலதனமிட்டுள்ளான். சம்பந்தப்பட்ட மாநில அமுலாக்கப்பிரிவு அமைப்புகள் தொடக்கத்திலேயே நடவடிக்கை எடுக்காமல் விட்டதால்தான் இன்று அவன் வளர்ந்த பின் நடவடிக்கை எடுக்க முடியாத்படி சிக்கலை சந்திக்கின்றன. மிர்சி புலன் விசாரணை செய்யப்பட்டிருந்தால் அவன் புரவலனாக இருந்து வளர்க்கப்படுபவர்களும், எல்லா தொடர்புகளும் வெளிச்சத்திற்கு வந்திருக்கும். மிர்சியை போல ஏராளமான வழக்குகள் தொடக்க கால நடவடிக்கை எடுக்கப்படாததால் பின்னர் பெரிய மாஃபியா கும்பல் தலைவனாகியதால் நடவடிக்கை எடுப்பது சிக்கலுக்குள்ளாகியுள்ளன.

மேலுள்ளவை சி.பி.ஐ. உயரதிகாரிகள் தந்த விவரங்கள் என வோரா அறிக்கை குறிப்பிடுவன. கீழுள்ளவை வோரா அறிக்கை குறிப்பிடும் ஐ.பி.உயரதிகாரிகள் தந்தவை:

உள்ளூர் அரசியல்வாதிகளின் கையாட்களாக உள்ள கிரிமினல் கும்பல்கள் அரசியல் வேலைகளில் குறுக்கிடுவதையும் அரசு அதிகாரிகள் உதவியுடன் தம்மை பாதுகாத்துக் கொள்வதையும்


படிப்பகம்

www.padippakam.com

உ.பி., பீகார், ஹரியானா மாநிலங்களில் பரவலாக காணலாம். சில அரசியல்வாதிகள் கிரிமினல் கும்பலின் ஆயுதப் படைகளின் தலைவர்களாக இருப்பதும் நாளடைவில் இவர்கள் கட்சியில் உள்ளூர் பதவிகளைப் பிடிப்பதும் பின்னர் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களாவதும் நடக்கிறது. இதன் விளைவு இக்கிரிமினல் கும்பல்கள் அரசியல் பலத்தோடு அரசு நிர்வாக செயல்பாடுகளை முடக்குவது; பொது மக்களின் சொத்துக்கள், பாதுகாப்பான வாழ்க்கைக்கு பங்கம் விளைவிப்பது, இதனால் பெரிய மாஃபியாக்கள் சர்வதேச தொடர்பு வைத்துக் கொண்டு ''ஹாவலா'' என்கிற பணக்கடத்தல் மற்றும் கறுப்பு பண மாற்றம் மூலம் அரசுக்கு இணையாக பொருளாதார கட்டமைப்பு கொண்டிருப்பதால் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு பாதிப்புக்குள்ளாவது போன்றவைகள் நிகழ்கின்றன.

மாஃபியா கிரிமினல்' கும்பல்கள் போதுமான, நிலையான பணபலம், குண்டர் பலம் மற்றும் சமூக மதிப்பை பெற்றுள்ளன. அரசு எந்திரத்தில் அனைத்து மட்டங்களிலும் ஊழல்படுத்தி உதவுபவர்களைக் கொண்டிருப்பது, புலன் விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்கும் அமைப்புகளின் ரகசிய தகவல்களை பெறுகிற அளவிற்கு செல்வாக்கு இருப்பது கிரிமினல்களின் கூடுதல் பலமாக உள்ளது. நீதித்துறை அமைப்புகளில் உள்ள நபர்களைக் கூட இவர்கள் நண்பர்களாகப் பெற்றிருக்கிறார்கள்.

போதைப் பொருள், ஆயுதங்களை கடத்தும் மாஃபியாக்கள் சிறந்த வலைப்பின்னலை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். குறிப்பாக இத்தகையோர் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், குஜராத், மஹாராஷ்டிரா மாநிலங்களில் உள்ளனர். இக்கிரிமினல் கும்பல்களுக்கு உள்ள அரசியல் செல்வாக்கு அல்லது இவர்களே அரசியல்வாதியாக வருவது காரணமாக புலன் விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்கிற அமைப்பு அதிகாரிகள் சமரசம் செய்து கொள்வதற்கே வழிவகுக்கிறது. இந்நோய் நாடு முழுவதும் முக்கியமான பகுதிகளிலெல்லாம் பரவியுள்ளது. குறிப்பாக கடலோரா, எல்லையோர மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் இதன் பாதிப்புகளை பம்பாய் குண்டு வெடிப்பு மற்றும் சூரத், அகமதாபாத் நகர மதக்கலவரங்களின் மூலமும் உணர முடியும். இந்திய ரகசிய மாஃபியா கும்பல்களை சதித்தனமாகப் பயன்படுத்தி பாகிஸ்தான் உளவு அமைப்பு ஐ.எஸ்.ஐ. மற்றும் அரபு நாடுகளின் உளவு அமைப்புகள் பல நாச வேலைகளை, மதக்கலவரங்களை பல இடங்களில் நிகழ்த்துகின்றன. ரகசிய உலக மாஃபியாக்கள், அரசு துறைகள்; அரசியல்வாதிகள், வியாபார துறைகள், திரைப்பட உலகம் ஆகியவற்றுக்கிடையே பலமான தொடர்பு இருப்பதைத்தான் பம்பாய் குண்டு வெடிப்பு புலன் விசாரணையும் சொல்கிறது.

சுருக்கமாக சொன்னால் மாஃபியாக் கும்பல்கள் இணையான அரசாங்கம் நடத்துகிறார்கள். நமது அரசாங்கத்துக்கு இணையாக தனி ஒரு வலைப்பின்னலைக் கட்டிக் கொண்டு ஆதிக்கம் செய்து அரசு எந்திரத்தை செயலற்ற, பொருத்தமற்ற நிலைக்குத் தள்ளுகின்றன.

எனவே, இக்கிரிமினல் கும்பலை கையாளுவதற்கென்று பொருத்தமான செயலூக்கமுள்ள ஒரு தனி நிறுவனம்



**வோரா குழுவின் ஆய்வு முறைகளும் முன் வைத்துள்ள ஆலோசனைகளும் முழுக்க ஒரு அதிகார வர்க்க - நிர்வாக சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் ஆனவையே.**

தேவை. தற்போது உள்ள அரசு துறை உளவு நிறுவனங்கள், மத்திய மாநில அமுலாக்கப்பிரிவு அமைப்புகளுக்கு இடையில் தகவல் பரிமாற்றமோ, சுதந்திரமான ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடோ இல்லை. இதற்காக இவற்றை இணைத்து வழிகாட்டும் உயர்ந்த அதிகாரம் படைத்த ஒரு நிறுவனம் (Nodal Agency) உருவாக்கப்பட வேண்டும்.

இனி வருமானம் (Revenue department) தொடர்பான புலன் விசாரணை, உளவு, அமுலாக்க நடவடிக்கை நிறுவனங்களின் உயரதிகாரிகளிடம் வோரா குழு திரட்டிய விவரங்களைப் பார்க்கலாம்.

கலால் மற்றும் சுங்கத் துறை விதிமுறைகள் மீறப்படுவதும் மாஃபியாக்களுக்கும் அரசு நிறுவன அதிகாரிகளுக்கும் இடையிலுள்ள ரகசிய தகவல் பரிமாற்றம் நடப்பதும் உள்ளது. வரித்துறைக்கு கீழ் இயங்கக் கூடிய பல்வேறு உளவு, புலன் விசாரணை, அமுலாக்கப் பிரிவு நிறுவனங்களுக்குள் தகவல் பரிமாற்றம் முறையாக இல்லை; அதிகாரப் போட்டியில் ஒருவரை ஒருவர் அலட்சியப்படுத்துவதும் உள்ளது.

எல்லைப்புற மாநிலங்களில் உள்ள அதிகாரிகளை நன்கு செயல்படும்படி உரிய தகவல்களோ, பயிற்சியோ அமுலாக்கப் பிரிவு இயக்குநரகம் கொடுப்பதில்லை. போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிறுவனம் தீவிரமாக செயல்பட முடியாதவண்ணம் இவை தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் உடனே கவனித்து தீர்க்கப்படாமல் தாமதம் செய்யப்படுகிறது. அதேபோல் என்.டி.பி.எஸ். என்ற ஒரு சட்டத்தின் கீழ் போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகளும் முரணானவையாக உள்ளன. கிரிமினல் பிரிவு நீதியமைப்பு போதுமானதாக இல்லை; உரிய நேரத்திற்கு குற்றவாளிகளை தண்டிப்பதுமில்லை; வழக்கு நடத்த போதிய அரசு வழக்கறிஞர்களும் இல்லை; தண்டனை கொடுக்கிற சில வழக்குகளிலும் குறைந்தபட்சத் தண்டனையே வழங்கப்படுகிறது.

இதுவல்லாமல் வருமான வரி துறையைச் சேர்ந்த பல பிரிவு நிறுவன கள அதிகாரிகள் மாஃபியாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதபடி உயர் அதிகாரிகளாலும் அரசியல் தலைவர்களாலும் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்; இவர்களுக்கு மாஃபியாக்கள் கட்டளையிடுவது வெளிப்படையானது.

அரசு நிறுவன அதிகாரிகளுக்கும் மாஃபியா கும்பலுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் ரகசியமாக இருப்பதால் (பேச்சு முறையில் இருப்பதால்) சட்டபடி நடவடிக்கை எடுக்கவும் முடியவில்லை. எந்த நிறுவனங்கள் குற்றமிழைக்கின்றன என்று கண்டுபிடிக்கவும் முடியவில்லை. வருமானவரி துறைக்குக் கீழுள்ள நிறுவனங்கள் உளவறியும் தகவல்கள் வெளியே வேறு நிறுவனங்களுக்குப் பரிமாற்றம் செய்கிறவரை அவர்களை கட்டுப்படுத்துகிற சட்டங்களால் ஒன்றும் பயனில்லை. அரசு நிறுவனங்கள், மாஃபியாக்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடியும், வழக்கை மெதுவாக நடத்தும்படியும் நிர்பந்தம் வெளியிலிருந்து மாஃபியாக்களிடமிருந்து வருகிறது என்பதும் மாஃபியாக்களின் தொடர்புகள் அரசு நிறுவனங்களில் வலுப்பெற்று வருவதும் பொதுவாக தெரிகிறது. ஒரு சோதனை - தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னரோ, கிரிமினல்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்ட உடனேயோ மாஃபியாக்களிடமிருந்து வருகிற இவ்வகை நிர்ப்பந்தம் தெளிவா


படிப்பகம்

www.padippakam.com

கத் தெரிகிறது. ஒன்று அரசு நிறுவன அதிகாரிகள் ஊழல்படுத்தப்படுகிறார்கள் அல்லது இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் தீர்வாக வோரா குழு முன்வைத்துள்ள ஆலோசனை "நோடல் ஏஜென்சி" என்று ஒரு நிறுவனம் உருவாக்க வேண்டும் என்பதே; அதாவது கிரிமினல்கள், அரசியல்வாதிகள் தொடர்பை கட்டுப்படுத்த, ஒழிக்க அதிகார வர்க்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக் கோருவதே.

கிரிமினல்கள் மாஃபியாக்களாகியதும் அரசியல் கிரிமினல் மயமாகியதும் சிறு குற்றவாளிகளிலிருந்து தொடங்கி தனி ஒரு உலகமாக ரகசிய வலைப்பின்னல்களுடன் வளர்ந்து வந்து அரசாங்கப் பொருளாதாரத்திற்கு பாதிப்பை உருவாக்குகின்றன என்பதைத்தான் வோரா குழு மையமாக முன்வைக்கிறதே ஒழிய இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி விரிவாக ஆராயவுமில்லை. முன்வைக்கவுமில்லை, கிரிமினல்களாலும் அரசியல் கிரிமினல்மயமாகி வருவதாலும் சிறு கிராமங்களில் கூட திருட்டு, கொள்ளை, வழிப்பறி, தண்டல், கொலை போன்ற குற்றங்களை செய்கிற ரௌடிகளால் விளைகிற தீமைகள் சாதாரன மக்களால் தாங்க முடியாதவை. சந்தை நகரங்கள், நகரங்களில் எல்லாம் மக்கள் கிரிமினல்களுக்கு அஞ்சி வாழ்வதும், மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து அரசியல் - பொது விவகாரங்கள் வரை கிரிமினல்கள் குறுக்கிட்டு அட்டூழியம் புரிவதும் - ஆதிக்கம் செய்வதும்தான் உள்ளது. இதற்கு இன்றைய சமூக அமைப்பு; சட்ட திட்டங்கள், அதிகார எந்திரங்கள், கலாச்சார நிறுவனங்கள் அனைத்தும் பெரிதும் துணை நிற்கின்றன.

கிரிமினல் அரசியல் என்பது இக்கேடுகெட்ட சமூக அமைப்பிலேயே வேரோடி - புரையோடிப் போயுள்ளது. ஆளும் வர்க்க - அதிகார வர்க்க கும்பல்கள்தான் இதற்கு தோற்றுவாயாகவும், புரவலர்களாகவும், பாதுகாப்பாளர்களாகவும் விளங்குகின்றன. இச்சமூக அமைப்பையும் இக்கும்பலையும் தூக்கியெறியாமல் மாஃபியா - கிரிமினல் கும்பல்களின் கொட்டத்தை அடக்க முடியாது. ஆனால் சுசில் சர்மா போன்று சிலரின் முக விலாசங்கள் சந்தி சிரித்து விட்டபின் ஏதாவது நடவடிக்கை எடுப்பது, விசாரணை (அ) ஆய்வு கமிட்டி நியமிப்பது, வெள்ளை (அ) ஆய்வு அறிக்கை உருவாக்கி சமர்ப்பிப்பது, அதை விவாதிப்பது என்பதை திட்டமிட்டு உருவாக்கி பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்வதை ஆளும் வர்க்க கும்பல்கள் தொடர்ந்து கடைபிடிக்கின்றன.

• சுப்பு

## ம.க.இ.க. கலைக்குழு பிரச்சார இயக்கம்

நாடு மீண்டும் அடிமையாகி வருவதையும் இதற்கெதிராக போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் மீனவர்கள், விவசாயிகள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் முகமாக தென்மாவட்டங்களுக்கு குறிப்பாக, நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் திருச்சி கலைக்குழுவினர் பிரச்சார இயக்கம் மேற்கொண்டனர். இங்குள்ள புறநகர் கிராமங்களிலும் நகரங்களிலும், மீனவர் குப்பங்களிலும் ஜூலை; மாதத்தின் இறுதியில் 20 நாட்கள் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தொட்டுப் பேசியும் பாடியும் பிரச்சாரம் செய்ததால் உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். குறிப்பாக மீனவர்கள், ஆழ்கடலில் அந்நிய நாட்டு கப்பல்கள் நுழைந்து மீனவர் வாழ்க்கையை பாதிப்பது தொடர்பாக பேசியபோது உற்சாகத்துடன் ஆதரித்து டீ வாங்கி கொடுத்து நிதியளித்து உதவினர். சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் தமது பிள்ளைகள் போல் காத்து, உணவளித்து, தங்குமிடம் அளித்து உதவினர். ம.க.இ.க.வின் வெளியீடுகளை ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டனர். தங்கள் கருத்துக்களையும் முகவரிகளையும் கொடுத்து உற்சாகமூட்டியது குறிப்பிடத்தக்கது.

நாகர் கோவில் நகரப் பேருந்து நிலையத்தில் பிரச்சாரம் செய்த போது இரு போலீசு வந்து "அனுமதி வாங்கித்தான் நிகழ்ச்சி நடத்த வேண்டும்" என்று தடுத்து மிரட்டிச் சென்றனர். இதைப் பார்த்த மக்கள் பலர் போலீசை திட்டவும் கலைக்குழு பிரச்சாரத்தைத் தொடர உற்சாகமூட்டி பேசவும் செய்தனர். புளியங்குடி அருகிலுள்ள கடையநல்லூர் கிராமத்தில் பிரச்சாரம் செய்தபோது 'கியூ' பிரிவு போலீசார் வந்து தோழர்களை கைது செய்து கொண்டு போய் நிலையத்தில் வைத்து மிரட்டினர். பின்னர் விடுவித்ததும் மக்கள் தோழர்களை சூழ்ந்து கொண்டு பாராட்டியும் உற்சாகமூட்டியும் பேசி ஆதரவு தந்தனர். கருத்துச் சுதந்திரம் என்பதன் வித்தவாட்டத்தை பாமர மக்களே நேரிடையாகப் புரிந்து கொண்டு போலீசை திட்டி தீர்த்தனர். இதுவல்லாமல் நெல்லையில் ஒரு காங்கிரஸ்காரன் வம்புக்கு வந்து மக்களே பதிலுரைத்த பின் அடங்கிப் போனான். நாகர்கோவிலில் குன்னுவிளை வடசேரி பகுதியில் பிரச்சாரத்திற்குப்பின் மக்கள் உற்சாகமாகி இந்துவெறி சங்கம் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி அமைப்புகள் பகுதியின் நுழையவிடாமல் தடுத்த தமது செயல்பாட்டை விளக்கிப் பேசினர்.

மொத்தத்தில் இப்பிரச்சார இயக்கம் மக்களுக்கும், கலைக்குழுத் தோழர்களுக்கும் பயனுள்ளதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் அமைந்தது.

## ஏழைகள் வயிற்றிலடித்த போலி கம்யூனிஸ்டுகள்

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவிபட்டணம் - காளியம்மன் கோவில் அருகிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் காலனி வீடுகள் கட்டித் தருவதில் ஊழலும் முறைகேடுகளும் நடந்துள்ளன. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தரும் அரசு திட்டத்தை இப்பகுதியில் செயல்படுத்தும் வேலையை செய்து வரும் சி.பி.ஐ(எம்) கட்சியினரும் முன்னாள் கிராம அதிகாரி கிருஷ்ணசாமி, சிவில்துறை வட்டாட்சியாளர், பஞ்சாயத்து யூனியன் நிர்வாக ஆணையாளர் (B.D.O.) ஆகியோரும் பாமர மக்களை ஏய்த்து பிழைத்து வருகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 60 வீடுகள் கட்டி தருவதாகக் கூறி நபருக்கு 2500 ரூபாய் வசூலித்துக் கொடுக்கச் சொல்லி அதிகாரிகள் தின்று ஏப்பம் விட்டுவிட்டார்கள். சிலரிடம் 7000 ரூபாய் கூட வசூலித்துள்ளனர். இதுவல்லாமல் 60-க்கும் மேற்பட்டவர்களிடமும் வசூலித்திருப்பதாகத் தெரிகிறது. 7 ஆண்டுகளுக்குப் பின் கடந்த ஆண்டுதான் 27 வீடுகள் மட்டும் கட்டப்பட்டுள்ளன. இவற்றை ஒதுக்கப்பட்ட நபர்களுக்குத் தராமல் பணம் வாங்கி கொண்டு 'மார்க்சிஸ்டு'கள் வேறு நபர்களுக்கு தந்துள்ளனர். இப்படி தந்ததில் சுந்தரம் மற்றும் குருவாத்தாள் என்கிற கூலி விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதை பகுதியிலுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தட்டி கேட்டதும் ஆத்திரமுற்ற போலி கம்யூனிஸ்டுகள் அடாவடித்தனமாக பதிலுரைத்ததோடு ரௌடித்தனமாக தாக்கவும் செய்தார்கள். பின்னர் தக்க பதிலடி கொடுக்கப்பட்டது. ஏற்கனவே இதே போல் தங்கமணி, குருசாமி என்ற இருவருக்கும் வீடு தர மறுத்து அடாவடித்தனம் செய்ததை தட்டிக் கேட்டு வீடு பெற்று தந்தது, வி.வி.மு. இதனால்தான் வி.வி.மு. மீது மூர்க்கத்தோடு பாய்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்.

மேலும் இந்த வீடுகளுக்கு மின்சாரம், சாலை வசதி செய்ய, தென்னங்கன்று நட, வரி கட்ட எனக் கூறி வசூலித்த பணத்தையும் உரியவற்றிற்குப் பயன்படுத்தவில்லை. இதுவல்லாமல் நிலம் வாங்க என செலவாகிய பணம் 40000 ரூபாய் 'டாட்கோ' மூலம் தரப்பட்டுவிட்டது. இந்த 60 பேருக்கும் திருப்பி கொடுக்காமல் சுருட்டிக் கொண்டார்கள்.

இப்படி அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு மக்களுக்கு விரோதமாக செயல்படும் போலி கம்யூனிஸ்டுகள் மீது முன்பு நம்பிக்கை வைத்து ஆதரவாளர்களாக இருந்தவர்கள் எல்லாம் இன்று வெறுப்புடன் விலகி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



# ஆந்திராவில் தொடரும் அரசு பயங்கரவாத அடக்குமுறை

ஆந்திராவில், நக்சல்பாரி புரட்சியாளர்களான மக்கள் யுத்தக் குழு மற்றும் அதன் 7 மக்கள் திரள் அமைப்புகள் மீதான தடையை, ஜூன் மாத இறுதியிலிருந்து 3 மாத காலத்துக்கு தற்காலிகமாக நீக்கிய என்.டி.ஆர். அரசின் ஜனநாயக கபட நாடகம் வெகு விரைவிலேயே அம்பலமாகிவிட்டது. "போலீசுடன் மோதல்" என்ற பெயரில் நக்சல்பாரிகள் மீதான கொலைவெறியாட்டம் ஒருபோதும் நடக்காது என்று என்.டி.ஆர். உறுதியளித்துக் கொண்டிருக்கும் போதே கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 6 புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆந்திராவில் நக்சல்பாரி புரட்சிகரக் குழுக்கள் மீது தடை விதிக்கப்பட்டாலும், தடை நீக்கப்பட்டாலும் அங்கு தொடர்வது அரசு பயங்கரவாதப் படுகொலைகள்தான்!

**என்.டி.ஆரின் பயங்கரவாதப் படுகொலைகளுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்**

ஆந்திராவிலுள்ள நக்சல்பாரி குழுக்களில் ஒன்றான பாணிபக்ஷி குழு மீது தடையேதும் விதிக்கப்படவில்லை. ஆனாலும் அக்குழுவின் மாநிலக் கமிட்டி செயலாளரான மதுசூதன் ராஜ் யாதவ், கடந்த ஜூலை 26-ம் தேதியன்று "போலீசுடன் மோதல்" என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்து இழுத்துச் சென்ற சிறப்பு அதிரடிப் படை போலீசார், ரகசியமாக சுட்டுக் கொன்றுவிட்டு, யாரோ அடையாளம் தெரியாத ஒரு தீவிரவாதி



போலீசுடன் நடந்த மோதலில் மாண்டதாக கூசாமல் புளுகினர். இப்பயங்கரவாத அட்டூழியத்தை எதிர்த்து புரட்சிகர அமைப்பினரும் மனித உரிமைக் கழகத்தினரும் தலைமைச் செயலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி நீதி விசாரணை கோரினர். பின்னர் மனித உரிமை அமைப்புகள் நீதிமன்றத்தில் முறையிட்டு போராடிய பிறகு, நீதிமன்ற உத்திரவுப்படி யாதவின் உடலை அவரது குடும்பத்தினர் பார்க்க முடிந்தது.

இத்தகைய பயங்கரவாதக் கொலைவெறியாட்டங்கள் ஒருபுறமிருக்க, சாதாரண பொதுக்கூட்டம் நடத்தக்கூட அனுமதி மறுத்து என்.டி.ஆர் அரசு கருத்துச் சுதந்திர உரிமையையும் பறித்து வருகிறது. கடந்த மார்ச் 31-ந் தேதியன்று மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த 7 புரட்சியாளர்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு தியாகிகளானார்கள். இவர்களது நினைவாக சித்தூர் மாவட்டத்திலுள்ள மன்ன சமுத்திரம் கிராமத்தில் 32 அடி உயர நினைவுத் தூண் நிறுவி அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த ஜூலை 16-ந் தேதியன்று ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்கேற்கவிருந்த ஆந்திர மனித உரிமைக் கழகச் செயல் வீரர்களான டாக்டர் டி.வி. ராவ், டாக்டர் பாலாஜி, இக்பால், கிரந்தி சைதன்யா ஆகியோர் அவர்களது வீடுகளிலேயே கைது செய்யப்பட்டனர். நினைவுத் தூண் அமைந்துள்ள இடம் அரசுக்குச் சொந்தமானது என்று பொய்யான ஆவணங்களைத் தயாரித்து, கிராம மக்களின் இலவச உழைப்பால் உருவான இந்நினைவுத் தூணை தகர்க்கவும் ஆந்திர போலீசார் முயற்சித்து வருகின்றனர்.

# காடுகளும் தனியாருக்கு தாரை வார்ப்பு

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நமது நாட்டின் மொத்த பரப்பளவில் 40 சதவீதம் இருந்த வனப்பகுதிகள், ஆட்சியாளர்களின் சுற்றுச்சூழல் அக்கறையற்ற பல்வேறு தவறான நடவடிக்கைகளின் காரணமாகவும், மரங்களை வெட்டிக் கடத்துவது போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளின் விளைவாகவும் இன்று 19.47 சதவீதமாகச் சுருங்கிப் போய்விட்டது. இந்நிலையில் தொழிற்துறை அதிபர்கள் தங்களின் மூலப் பொருள் தேவைகளுக்காக வனப்பகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் வகையில் சட்டதிருத்தம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளது மைய அரசு. விவசாய மற்றும் சமூக நலத் துறை அமைச்சகங்கள் இத்திட்டத்தினால் விளையக் கூடிய அபாயங்களை எடுத்துக் கூறியதையும் பொருட்படுத்தாது, இத்திட்டத்தினை சட்டமாகக் கொண்டு வர ஒப்புதல் அளித்து விட்டது காங்கிரசு தலைமை. இத்திட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் சட்டமாக வரு முன்னரேயே, இதனைச் செயல்படுத்துவதில் மும்முரமாகிவிட்டன மாநில அரசுகள்.

- அருணாச்சல பிரதேசத்தில் 25,000 ஹெக்டேர் வனப்பகுதி "கிட்பிள்ஸ்" என்ற பிளைவுட் தயாரிக்கும் தொழில் நிறுவனத்திற்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது; ஒரிஸ்ஸா மாநில அரசு, பிர்லா - தாபர் கூட்டில் தொடங்கப்படும் காகித ஆலைக்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வனப்பகுதியை ஒதுக்கித் தர சம்மதித்துள்ளது.
- குஜராத் மாநில பா.ஜ.க. அரசு அம்மாநில உயர்நீதி மன்றத் தீர்ப்பையும் மீறி 766 சதுர கி.மீ. பரப்பளவுள்ள சிங்காரா சரணாலயத்தை 96 ச.கி.மீட்டராகச் சுருக்கி மீதமுள்ள வனப்பகுதியைச் சுரங்கத்திற்காகவும் சிமெண்ட் ஆலை அமைக்கவும் தனியாருக்குத் தாரை வார்த்துவிட்டது.
- கர்நாடகாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் 5,000 ஏக்கர் வனப்பகுதியை டாடாவின் "டிஸ்கோ" நிறுவனத்திற்கு ஒதுக்கீத் தர பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.
- மேற்கு வங்கத்தில் காடுகள் அழிக்கப்பட்டு 3 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மீண்டும் பசுமை செழிக்கச் செய்ய அமைக்கப்பட்ட 2000 கிராம வனக் கமிட்டிகளை "மார்க்சிஸ்ட்" அரசு சமீபத்தில் கலைத்துவிட்டது.

இத்திட்டத்தின்படி ஏற்கனவே முற்றிலும் மரம், செடி, கொடிகள் வெட்டப்பட்டு மொட்டையடிக்கப்பட்ட வனப்பகுதியினைச் சேர்ந்த 25 இலட்சம் ஹெக்டேர் நிலம் காகிதம், செயற்கை நூலிழை, பிளைவுட்



படிப்பகம்

www.padippakam.com

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கு வழங்கிவிட முயன்று வருகின்றன மைய - மாநில அரசுகள். இத்தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு பசுமையான வனப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொள்ளவே செய்யும். இதனால் வன விளைபொருட்களையே நம்பி வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள் சொந்த பூமியிலேயே அகதிகளாக்கப்படுவதோடு, பல்வேறு வகையான உயிரினங்களும் தாவர வகைகளும் அழிந்து போகும் அபாயம்தான் உருவாகும்.

## இந்து வெறியர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகம்

ஒன்றைப் பலியிட்டு பல ஆதாயங்களைப் பெறுவது என்ற நோக்கத்துடன், மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள தபோலில் 9000 கோடி ரூபாய் முதலீட்டில் மின் உற்பத்தி நிலையம் அமைக்கத் தொடங்கிய அமெரிக்காவின் "என்ரான்" நிறுவனத்தின் கட்டுமானப் பணிகளை நிறுத்தியும், இரண்டாம் கட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்தும், மகாராஷ்டிராவில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள இந்து வெறியர்கள் 'தேச பக்த நாடகமாடி வருகிறார்கள்.

பன்னாட்டு நிறுவனமான என்ரானின் மின் உற்பத்தித் திட்டத்துக்கு முன்பு ஆட்சியிலிருந்த (காங்கிரசு) சரத்பவார் அரசு அனுமதியளித்திருந்தது. இத்திட்டதிற்காக பல நாடுகளிடமிருந்து ஏல விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. திட்டமிட்டதைவிட, மூலதன மற்றும் உற்பத்திச் செலவு கூடுதலாகி, ஒரு யூனிட் ரூ. 2.40 என்ற அளவுக்கு மின்சாரத்தின் விலையும் அதிகரிக்கும். மேலும் என்ரானின் முதலீட்டுக்கு ஆண்டொன்றுக்கு 16% இலாபம் தரும் வகையில் மின்சாரத்தை வாங்கிக் கொள்ளவும் மைய அரசினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படுவதுடன் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட காரணங்களை முன்வைத்து, காங்கிரசு தவிர பிற ஓட்டுக்கட்சிகளும், சுற்றுச் சூழல் - சமூகவியலாளர்களும், அம்மாநில மக்களும் என்ரானை வெளியேற்றக்கோரி போராடி வந்தனர்.

இந்நிலையில், தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் கூறி, என்ரான் திட்டத்தை இந்து வெறியர்கள் ரத்து செய்வதாக அறிவித்துள்ளனர். இதனை காங்கிரசு அல்லாத பிற ஓட்டுக் கட்சிகள் வரவேற்றுள்ளதோடு, பகுதி வாழ் மக்களும் தமது போராட்டத்தின் வெற்றியாக பூரித்துப் போகிறார்கள். மக்களின் பொதுக்கருத்து என்ரானுக்கு எதிராக உள்ளதால், அத்திட்டத்தை ரத்து செய்து மக்கள் நல அரசாகக் காட்டிக் கொள்ளவும், வருமாண்டில், நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், முன்னாள் காங்கிரசு முதல்வரான சரத்பவாரின் செல்வாக்கை வீழ்த்தவும்தான் இந்து வெறியர்கள் இப்படி தேசபக்த வேஷங்கட்டி ஆடுகின்றனர். உண்மையில் இந்து வெறியர்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையோ, அன்னிய மூலதன ஆதிக்க எதிர்ப்பு ணர்வோ மருந்துக்கும் கிடையாது.

என்ரானைத் துரத்திவிட்டு மாபெரும் நாட்டுப் பற்றாளர்களாக பீற்றிக் கொள்ளும் இதே இந்துவெறியர்கள் இராசஸ்தான் மாநிலத்தில் இதே என்ரானுடன் கூட்டு சேர்ந்து மின் திட்டத்தை தொடங்கவுள்ளனர். மராட்டிய முதல்வர் அண்மையில் மேலை நாடுகளுக்குச் சென்று அன்னிய முதலீடுகளை வரவேற்றுள்ளதோடு, பம்பாய் விமான நிலைய விரிவாக்கத்துக்கு ஏகாதிபத்தியங்களுடன் அவசர ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார். "என்ரான் முறைகேடான வழிகளின் மூலம் நுழைந்ததாலேயே ஒப்பந்தத்தை ரத்து செய்தோம். மற்றபடி, அன்னிய முதலீடுகளுக்கு



என்ரான் ஒப்பந்தம் ரத்தானதைக் கொண்டாடி மகிழும் பகுதி வாழ் மக்கள்: மகிழ்ச்சி நீடிக்குமா?

நாங்கள் எதிரிகளல்ல" என்றுதான் இந்துவெறி பிரமுகர்களும் பேட்டியளிக்கிறார்கள். "மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள்; இந்நிலையில் நமக்குச் சாதகமான வழியில் என்ரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி புதிய ஒப்பந்தம் போடலாம்" என்று இந்துவெறி ஆதரவு பத்திரிகைகளும், பொருளாதார நிபுணர்களும் ஆலோசனை கூறத் தொடங்கிவிட்டார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பு 'சூரப்புலி'களான இந்து வெறியர்களும் அதற்கான காலம் கனிவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

## திவாலாகும் பொருளாதாரம் ராவ் கும்பலின் பித்தலாட்டம்

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, கடந்த நான்காண்டுகளாக நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாக புள்ளி விபர - சதவீதக் கணக்கு காட்டி காங்கிரசுத் துரோகிகள் சதிராடி வந்தனர். அத்தனையும் பொய் என்பதை பெருகி வரும் பொருளாதார நெருக்கடிகளைக் காட்டி, கடந்த ஜூலை மாதத்தில் வெளியான திட்டக் கமிஷனின் இடைக்கால ஆய்வறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

இந்திய அரசில் மொத்தக் கடன் 6 லட்சம் கோடியாக 1996 மார்ச்சில் உயர்ந்து விடும். இதில் வெளிநாட்டுக் கடன் ரூ. 2,94,500 கோடி. மொத்த அந்நியக் கடனில் 11% தொகைதான் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மீதி 89% முந்தைய கடன்களைத் திருப்பிச் செலுத்தப் போய்விடுகிறது. 1995-96-இல் வாங்கப் போகும் 11,526 கோடி ரூபாய் அந்நியக் கடனில் 4,325 கோடி ரூபாய் பழைய கடன்களுக்கு வட்டி கட்டவே போய் விடும். இதன் விளைவாக 1991-இல் ஏற்பட்ட பொருளாதார திவால் நிலைமை இந்த ஆண்டில் தீவிரமாகும் என்று



படிப்பகம்

www.padippakam.com

புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரிக்கும் பொருளாதார நிபுணர்களே பீதியில் அலறுகின்றனர்.

1994 - 95-இல் மொத்த செலவினங்கள் 10,000 கோடி ரூபாயாக இருக்கும் என்று நிதியமைச்சர் அறிவித்தார். ஆனால் அது 20,000 கோடியாக உயர்ந்துள்ளது. பற்றாக்குறையை ஈடுகட்ட செலவினங்களில் சிக்கனத்தை மேற்கொள்வதாகக் கூறி மொத்தப் பற்றாக்குறை ரூ. 37,000 கோடியாக இருக்கும் என்றார். ஆனால் அது 60,000 கோடியாகி விட்டது. அரசின் செலவினங்கள் மீதான கட்டுப்பாட்டை நிதியமைச்சகம் இழந்து விட்டது. பண வீக்க விகிதம் சற்றே குறைந்து மீண்டும் உயர்ந்து கொண்டே போகிறது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டு எண்ணும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது என்று திட்டக் கமிஷன், நிதியமைச்சகத்தின் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளது. அரசுத்துறை நிறுவனங்களில் முதலீட்டைக் குறைத்து தனியாருக்கு தாரை வார்க்கும் கொள்கை, விவசாயம் மற்றும் சமூக நலத்துறை புறக்கணிப்பு, வறுமை — வேலையின்மை பெருக்கம், வருவாயை விழுங்கும் வட்டிச்சுமை, விலையேற்றம், பணவீக்கம் முதலானவற்றைக் குறிப்பிட்டு அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையைச் சாடியுள்ளது.

வருமாண்டில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இத்தகைய பொருளாதார அறிக்கையை வெளியிட்டால் ஆபத்தாகிவிடும் என்று அஞ்சி ராவ் அரசு இதை முடக்கி வைத்துள்ளது. பொருளாதார திவால் நிலையை மூடி மறைக்கவும், வரப்போகும் பொதுத் தேர்தலைக் குறிவைத்தும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம், கிராமப்புற மக்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் முதலான கவர்ச்சித் திட்டங்களை ராவ் கும்பல் அறிவித்துள்ளது.

## போலிக் கம்யூனிஸ்டு பங்காளிகளுக்கிடையே லடாய்

யார் வர்க்க சமரசவாதி? என்பதையொட்டி 'இடது', வலது போலிக் கம்யூனிஸ்டுகளிடையே நடக்கும் வாதப் பிரதிவாதங்கள் நாய் சண்டையாக முன்னேறி வருகிறது. அவசரநிலைப் பாசிசத்தின் 20-வது ஆண்டையொட்டி 'மார்க்சிஸ்டு' கட்சியின் பொதுச் செயலாளரான ஹரிகிஷன்சிங் சுர்ஜித் தமது கட்சிப் பத்திரிகையான ''பீப்பிள்ஸ் டெமாகிரசி''-யில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். எல்லோருமே பாசிச இந்திராவின் அவசரநிலை ஆட்சியை எதிர்த்த போது, வலதுகள் இந்திராவை ஆதரித்து நின்றதை விமர்சித்திருந்தார். உடனே வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சதுரனன் மிஸ்ரா, தாங்கள் படிண்டா நகரில் நடந்த கூட்டத்தில் அவசர நிலையை ஆதரித்தது தவறு என்று அப்போதே சுயவிமர்சனம் செய்து கொண்டதாகவும், இதை 'இடதுகள்' இப்போது கொச்சைப்படுத்துவதாகவும் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, வரலாற்று நிகழ்வுகளை நேர்மையாக மறுபரிசீலனை செய்ய வலதுகள் மறுப்பதாக 'இடதுகள்' சாடினர். இதை மறுத்த வலதுகள், ''நீங்கள் மட்டும் யோக்கியமா? அவசர நிலைக் காலத்தில் நீங்கள் பாசிச வகுப்புவாதக் கட்சியான ஜன சங்கத்தை (இன்றைய பாரதீய ஜனதாவின் தாய்க்கட்சி) ஆதரித்து கூட்டுச் சேரவில்லையா?'' என்று பதிலடி கொடுத்தனர்.

''எங்களை வர்க்க சமரசவாதிகள் என்று சாடும் நீங்கள் இன்று மே. வங்கத்தில் செய்வது என்ன? ஏகாதிபத்திய நாடுகளுக்குப் பறந்து சென்று பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களை வங்கத்தில் முதலீடு செய்யுமாறு கெஞ்சுவதுதான் வர்க்கப் போராட்டமா? முதலாளித்துவ வர்க்கத்துடன் பகிரங்கமாகக் கூட்டுச் சேரும் துரோகத்தனத்துக்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?'' என்று அம்பலப்படுத்துகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக ம.பி; ஒரிசா, மே.வங்க மாநிலங்களில் வலது கம்யூனிஸ்ட் ஊழியர்களை தம் பக்கம் இழுத்து அக்கட்சியின் அடித்தளத்தையே 'இடதுகள்' பறித்து வருவதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் வலதுகள், 'இடது'களின் யோக்கியதையை திரைகிழித்து வருகின்றனர். இதேபோல் 'இடது' முன்னணியிலுள்ள புரட்சிகர சோசலிசக் கட்சியும் (RSP) அண்மைக் காலமாக 'மார்க்சிஸ்டு'களை அம்பலப்படுத்தி வருகின்றனர். ஆயினும் 'மார்க்சிஸ்டு' சந்தர்ப்பவாதிகள் இவற்றுக்கு பொறுப்பாக இன்று வரை பதிலளிக்கவில்லை.

## இந்தியர்கள் மீது அணுக்கதிர் சோதனை: பிரிட்டனின் இனவெறி

பிரிட்டனில் வாழும் இந்திய மக்கள் மீது இரண்டு தலைமுறைக்கு முன்பு அணுக்கதிர் பரிசோதனை ரகசியமாக நடத்தப்பட்டது பற்றிய அதிர்ச்சியூட்டும் உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது. லண்டன் அருகிலுள்ள கேவெட்ரி நகரில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் பஞ்சாபி பெண்கள் இரும்புச் சத்து குறைவால் நோய்வாய்ப்பட்ட போது, அவர்களுக்கு மென்மையான அணுக்கதிரியக்கத் தன்மை கொண்ட சப்பாத்திகள் கொடுத்து சோதிக்கப்பட்டது. பிரிட்டன் மருத்துவ ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் மூலம் 21 பஞ்சாபி பெண்களுக்கு இவ்வாறு ரகசியமாக சோதனை நடத்தப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் விரைவிலேயே மாண்டு போய் விட்டனர். ''பயங்கர பரிசோதனைகள்'' எனும் தலைப்பில் பிரிட்டிஷ் தொலைக்காட்சியில் இதுபற்றி ஒரு தனியார் செய்திப்படம் ஒளிபரப்பாகியதும் பாதிக்கப்பட்ட இந்தியக் குடும்பங்கள் உண்மையறிந்து பீதியும் ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

இது மட்டுமின்றி, பிரிட்டனில் குடியேறிய கீழை நாடுகளைச் சேர்ந்தோரின் இறந்த குழந்தைகளின் உடலிலிருந்து எலும்புகள் ரகசியமாக எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுவது பற்றியும், கர்ப்பிணிப் பெண்களுக்கு கதிரியக்கத் தன்மை கொண்ட அயனிகளை ஊசி மருந்து மூலம் செலுத்தியது பற்றியும், புற்று நோயாளிகளுக்கு கதிரியக்கத் தன்மை கொண்ட உப்புகள் மருந்தாகக் கொடுத்து சோதிக்கப்பட்டதையும் இந்தச் செய்திப் படம் கூறுகிறது. இதை பிரிட்டனின் மருத்துவ ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகளும் மறுக்கவில்லை.

அன்று, யூதர்கள் மீது விஷவாயுப் பரிசோதனைகள் நடத்தி பாசிச இட்லர் இனவெறிப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டான். பாசிசத்தை வீழ்த்திய வீரர்களாகப் பீற்றிக் கொள்ளும் இதர ஏகாதிபத்தியங்களும் அதே இனவெறிக் கொள்கையைத்தான் ரகசியமாகச் செய்து வருகின்றன. ஜனநாயக வேஷங்கட்டி ஆடும் ஏகாதிபத்தியங்களின் உண்மை முகம் இது தான்!

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGA RAJ
படிப்பகம்

www.padippakam.com






முழங்காலுக்கு கீழே இரணமாகி நடக்கவே முடியாது முடமாகிப் போன தாய்; வாயைச் சுற்றி சிறு சிறு கொப்பளங்களாக வெடித்துப் புண்ணாகி முகமே விகாரமாகிப் போன இளம் குழந்தை. மருத்துவ உலகிற்கே புதிரான நோயோ அல்லது கோடிக்கணக்கில் செலவு செய்தால்தான் குணப்படுத்த முடியும் என்பதோ இல்லை. ஒரே ஒரு முறை ''பெனிசிலின்'' ஊசி போடப்பட்டிருந்தால், இவர்களின் உருவமும் வாழ்க்கையும் இப்படிச் சிதைந்து போயிருக்காது. இவர்கள் இருவரின் வாழ்க்கை மட்டும் தானா? இல்லை. ஒரிஸ்ஸா, ஆந்திரா, மத்தியப்பிரதேச மாநிலங்களில் வாழும் பெரும்பாலான ஆதிவாசிகள், தொழுநோய் போன்ற இந்த அறுவெறுக்கத்தக்க வியாதியால் முடமாகிப் போனார்கள்; உடலெங்கும் உருக்குலைந்து, எலும்புகள் வலுவிழந்து, சகிக்க முடியாத இவ்வேதனையை விட மரணம் விரைந்து வந்தால் போதும் எனக் கண்ணீர் வடிக்கின்றனர் பலர். ஐந்து கோடி ரூபாய் செலவழித்தால் இந்த வியாதியை இந்தியாவிலிருந்தே விரட்டியடித்து விட முடியும்; ஊதாரிச் செலவில் மூழ்கித் திளைக்கும் ஆட்சியாளர்களோ, இச்சிறு தொகையை ஒதுக்க மூன்று வருடங்களாக ஆலோசித்து வருகிறார்கள்.

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ துணை 'குடியரசுத்' தலைவர் ஆர்.கே. நாராயணன், ஆந்திர மாநில ஆளுநர் கிருஷ்ண காந்த், முதல்வர் என்.டி.ஆர். மூவரும் அம்மாநிலத் தலைநகர் ஹைதரபாத் நகரில், தனியாரின் அப்போலோ புற்றுநோய் மருத்துவ மனையைத் திறந்து வைத்து பார்வையிடும் காட்சி. வந்தால் மரணம் என்றிருந்த நிலையை மருத்துவ விஞ்ஞானம் மாற்றி விட்டது; கோடிகளில் மூழ்கித் திளைப்பவர்களுக்கு சர்வதேச தரத்தில் சிகிச்சை தர தனியார் மருத்துவமனைகளும் தயாராகி விட்டன. ''ஐந்து நட்சத்திர மருத்துவ மனைகள்'' - இதுதான் தனியார் மருத்துவமனைகளின் செல்லப்பெயர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மூலதனத்தைத் திரட்டவும், மருத்துவக் கருவிகளை இறக்குமதி செய்யவும், கட்டிடம் கட்ட கடன் வழங்கவும் இப்படி அரசு காட்டி வரும் கரிசனத்திற்கு அளவேயில்லை.



அடிப்படை சுகாதார வசதியின்றி, மலேரியா, காலரா போன்ற தொற்று வியாதிகளால் வருடந்தோறும் மாண்டு விழும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; ஆடம்பர - சொகுசு வாழ்விற்காக ''இன்னும் தாராளமயமாக்கு'' எனக் கூச்சல் போடும் பணக்கார கும்பல் மறுபுறம். இச்சிறு கும்பலின் வக்கிர வாழ்விற்காக நமது உயிரும் உதிரமும் உறிஞ்சப்படுவதை இன்னுமா அனுமதிக்கப் போகிறோம்?

www.padippakam.com